Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள் 08 விலை ரூபா: 5-50

ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம் 02 ஏப்ரல் ( 26 - 04 - 1991 ) வெள்ளிக்கிழமை ஓசை: 67

## உதவியாக வந்தவை கடனாக வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யு. எஸ். எயிட். நிறுவனத்தினர் யாழ். மாவட்டத்தில் உள்ள பதினையாயிரம் விவசாயிகளுக்கு தானிய உற்பத்திக்கென இலவசமாக வழங்கபபட வேண்டிய தானியங்களை சில உள்ளூர் நிறுவனங்கள் கடன் அடிப்படையில் வழங்கியதாக அறியபபடுகிறது. மேலும் உரிய காலத்தில் விதை தானியங்கள் வழங்கப்படாமையாலும், (8ஆம் பக்கம் பார்க்க)

# நாம் போராடுவது உரிமைக்காக தற்காலிக அமைதிக்காக விட்டுக்கொடுக்கமுடியாது

## பி. பி. சி. பேட்டியில் கிட்டு

(லண்டன்)

உரிமைக்காகப் போராடும் நாங்கள் தற்காலிக அமைதிக்காக எமது உரிமையை விட்டுக்கொடுகக முடியாது. எமது மக்களின் பாதுகாப்பிற்காகப் போராடும் நாங்கள் எதிர்பார்ப்பது நிரந்தர அமைதியை என விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) பி. பி. சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

திரு. கிட்டு வழங்கிய பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

இந்திய அரசு சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாயின் அதனிடமிருந்து எதனை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்ற கேள்விக்குப் பதிலளித்த திரு. கிட்டு பலரும் ஐக்கிய இலங்கை என்பதையே முதலில் வலியுறுத்துகின்றார்கள். அதிலிருந்து விடுபட்டு சிங்களவர்களுக்கு சிறிலங்கா என்றதொரு நாடு இருப்பதுபோல் தமிழர்களுக்கு தமிழீழம் இருக்கிறது என்பது ஏறறுக்கொள்ளப்பட வேண்டும் அப்போது தான் பேச்சுவார்த்தை அமைக்கப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### குமார்

(காரைநகர்)

காரைநகரில் நேற்று ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் குமார் வீரமரணமடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவுடன் இணைக்கமுயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய இலங்கை வங்கி அலுவலகத்தில் இருநது கிளிநொச்சி வங்கிக் கிளையை ( 8ஆம் பக்கப பார்க்க )

## தீவிரவாதிகளைப் பேச்சுக்கழைத்து அவர்களின பிரச்சினைக்கு தீர்வுகாணவுள்ளேன் - பிரேமதாஸா

(கொழும்பு)

''தீவிரவாதிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து அவர்களின் அத்தியாவசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவு செய்துள்ளேன்'' என சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேம (8ஆம் பக்கம் பார்க்க)

## ஏக பிரதிநிதிகள் என்பதை புலிகள்நிரூபிக்க வேண்டும் -இந்தியதூதர் ஜா

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள்தான் இலங்கைத் தமிழர்களின ஏகபிரதிநிதிகள் என்று கூறுவதை உலகிற்கு நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா கூறியுள்ளார். (8ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் மோதல்; விமானக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் தோப்புக்காடு சீநோர் பகுதிகளுக்குக் கவச வாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று அதிகாலை நான்கு முப்பது மணி முதல் நண்பகல் வரை கடும் மோதல் இடம்பெற்றது ஒரு பொம்மர் ஒரு ஹெலிகொப்ரர், ஒரு கப்பல், பத்து விசைப்படகுகள் என்பன இராணுவத்தினரின் நடவடிக்கைக்கு உதவின இராணுவத்தரப்பு சேதவிபரம் தெரியவரவில்லை. விடுதலைப் புலிகளில் ஒருவர் வீரமரணமடைந்துள்ளார்.

## சிறிலங்கா வருத்தம்

(கொழும்பு)

கொழும்பில் இந்தியப் பத்திரிகையாளரும், இந்திய உயர்ஸ்தானிகராலய ஊழியர் ராஜேந்திரனும் பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டமை குறித்து சிறிலங்கா அரசு வருத்தம் தெரிவித்துள்ளது. (8ஆம் பக்கம் பார்க்க)

## மேதினத்தின்மூலம் எமது உறுதியை சர்வதேச நாடுகளுக்கு காட்டவுள்ளோம்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் நாம் ஒவ்வொரு மேதின ஊர்வலங்களின்போதும் தமிழ்மக்களின் அபிலாசைகளை சிறிலங்கா அரசிற்கு எடுத்துக்காட்டுவதற்காகவே மேதினங்களில் எழுச்சி பெற்றோம். ஆனால் இந்த முறை மேதினத்துடன் நாம் (8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கெதிரானபோரை சிறிலங்கா ஆரம்பித்தது

வடக்குக் கிழக்கில் தேர்வுகள் நடாத்தப்படுவதை கருத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை நிறுத்தியிருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் கூறி இருந்த போதும் நேற்றுக் காலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அது ஆரம்பித்துள்ளது என இந்திய வானொலி அறிவித்தது.

காங்கேசன்துறை, ஆனையிறவு மற்றும் வடபகுதியின் பல இடங்களில் மோதல்கள் ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் உள்ள இந்திய நிருபரை மேற்கோள் காட்டி இந்திய வானொலி செய்தி வெளியிட்டது.

## மாணவர்கள் பங்களிப்பு எமது போராட்டத்தில் அதிகம் -தினேஷ்

(நமது நிருபர்)

''எமது போராட்டத்தில் மாணவர்கள்தான் அதிகளவு பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர். எமது இயக்கத்தில் இன்று 75 வீதமான உறுப்பினர்கள் மாணவர்களே'' என்று யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தினேஷ் குறிப்பிட்டார். 24ஆம் திகதி பண்டத்தரிப்பில் புகைப்படக் கண்காட்சி ஒன்றினை திறந்து வைத்து உரையாற்றிய தினேஷ்



மேலும் குறிப்பிடுகையில் நாம் நடத்துகின்ற போராட்டத்தில் எமது இயக்கத்தின் கடந்த கால வரலாறுபற்றி எம் மக்களில் பலருக்குத் தெரியாது. அதை தெரிந்துகொள்ளும் வாய்ப்பாக இந்த விடுத (8ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு வேளையிலும் பரீட்சை நடந்தது -சிறில்ரணதுங்கா

(கொழும்பு)

யாழ். குடாநாட்டுப் பகுதியில் அரசாங்கம் அறிவித்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோதிலும் ஆங்காங்கே பல இராணுவ நடவடிக்கைகள் தொடர்கின்ற போதிலும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறுவதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார். (8 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை மாவட்டத்தில் ஆறு காவலரண்கள் புலிகளால் அழிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தனிக்கல்லு மற்றும் அரியகுண்டான் கிராமப்பகுதிகளுக்கு இடையிலிருந்த இராணுவக் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் அதிகாலை 3 30 மணிமுதல் விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் மேற்கொண்டனர் அதிகாலைஐந்து மணிவரை நடத்தப்பட்டதாக் குதலில் ஆறு காவலரண்கள் முற்றாகச்சேதமாக்கப்பட்டன இத்தாக்குதலின்போது இராணுவத்தினரில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றவர்கள் ஓடிவிட்டனர். இந்நடவடிக் (8ஆம் பக்கம் பார்க்க)

## நாரந்தனையில் நால்வர் ஷெல் தாக்குதலுக்குப் பலி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து நாரந்தனை, செருக்கன் சந்திப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டதில் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30மணியளவில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலின் போது அண்ணாவி ஒழுங்கைப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல் ஒன்றினால் மெற்றில்டா (வயது 12) என்ற சிறுமியும், இவரது தாய், தந்தை ஆகியோரும், மேலும் சின்னப்பர் (வயது 55) (8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### இலவசம்

அகத்தி விதை இலவசம். ரூபா 2.00 அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். மில்க்வைற் யாழ்ப்பாணம்
( -2408)

### நீமியா உரம்

நீமியா உரத்தை யூரியாவுடன் கலந்து பாவிப்பதால் பயிருக்குச் சிறந்த அடிக்கட்டு உரமாகிறது. வாய்க்கால் நீரில் கழுவுப்பட்டோ அன்றி நீராவியாக மாறியோ யூரியாவில் சக்தி விரயமாகாமல் தடுக்கின்றது நீமியா உரம். ஒரு கிலோ பக்கெற் ரூபா 9.00 மட்டுமே! மில்க்வைற், யாழ்ப்பாணம்.
(B-2403)


# இட வசதிக்குறைவால் மட்டுப்படுத்திய சேவை

யாழ். பிராந்திய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இடவசதி மற்றும் தளபாட வசதிகள் பற்றாக்குறையால் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்கி வருகின்றது. இதனால் மாவட்டத்தின் வாடிக்கையாளர்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

கடந்த வருடம் சிறிலங்கா இராணுவ மற்றும் வான்படைகளின் தாக்குதல்களால் காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகம் பலத்த சேதமடைந்துள்ளதுடன் பல தளபாடங்களும் உபகரணங்களும் சேதமடைந்தன.

இந்தஉபகரணங்களைப்பெறுத் தருவதற்கோ கட்டடத்தைத் திருத்துவதற்கோ அரசு இதுவரை நடவடிக்கை எடுக்காததனால் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையான ஆயுட்காப்புறுதி மட்டுமே செய்யப்பட்டு வருகின்றது.

## ஜூனில் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு வருடங்களாக நடைபெறாது இருந்த தொழில்நுட்ப கல்லூரி பரீட்சைகள் ஜூன் மாத தொடக்கத்தில் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரீட்சைகள் பற்றிய மேலதிக விபரங்கள் அண்மையில் கொழும்பு சென்ற அதிபர் யாழ் திரும்பியதும் தெரிய வரும் என்றும் இந்த பரீட்சைகளை நடாத்த பரீட்சை ஆணையாளர் அங்கீகாரம் தந்துவிட்டதாகவும் கூறப்பட்டது. (லோ)

# கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விநியோகம்

யாழ். கல்வித்திணைக்களத்தில் பணிபுரியும் சகல ஊழியர்களுக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்புக் கட்டுப்பாட்டுவிலையில் சவர்க்காரம், தேங்காய்யெண்ணை, மண்ணெண்ணை ஆகியன வழங்கப்பட்டன.

கொழும்பிலிருந்து தடைப்பட்ட உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்களை ஏற்றி வந்த லொறியில் கொண்டு வரப்பட்ட மேற்படி பொருள்களே கல்விப்பணிப்பாளரினால் விநியோகிக்கப்பட்டது. ஊழியர் ஒவ்வொருவருக்கும் 3 லக்ஸ், 3 சன்லைற், 2போத்தல் தேங்காய் எண்ணை, 2 போத்தல் மண் எண்ணை ஆகியன கொழும்புக்கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்பட்டது. இதனை ஊழியர்கள் முண்டியடித்துப் பெற்றுக் கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. (ச)

# மேதின ஏற்பாடுகள்

(கோப்பாய்)

கோப்பாய் உ.அ.அ பிரிவிலுள்ள கிராமங்களில் மே தினத்திற்கான முன்னேற் பாட்டு வேலைகளும், கலந்துரை யாடல்களும் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. இக்கலந்துரையாடல்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சார்பில் பரா, ஆஞ்சநேயர், சியாமளா போன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு மேதின எழுச்சி சம்பந்தமாக உரையாற்றி வருகின்றனர். இக்கலந்துரையாடல்களில் பெருமளவு மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு மேதின ஏற்பாடுகள் தொடர்பான தமது கருத்துக்களைஎடுத்துக் கூறுகின்றனர்.

★ வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர்கள் சங்கம் மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கு ஆதரவாக அன்றையதினம்உறுப்பினர்கள் அனைவரையும் காலை பத்து மணிக்கு தமது பணிமனையில் கூடுமாறு கேட்டு கொண்டுள்ளது.

## விவசாய நடவடிக்கைகளை

# கெயர் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

(அராலி)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசமூடாக, அகில உலக கெயர் ஸ்தாபனத்தின் உதவியில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளை கெயர் ஸ்தாபனத்தின், இலங்கைக்கான பணிப்பாளர் திரு. ஹெவின்ஹென்றியும்மற்றும் உயர்அதிகாரிகளும்நேரடியாகப் பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினர். வட்டுக்கோட்டை தொல்புரம், அராலி, பருத்தித்துறை, புலோலி மேற்கு ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் விவசாய நடவடிக்கைகளே இவ்வாறு பார்வையிடப்பட்டன:

மற்றும் ஏனைய நிறுவனங்களூடாக கெயர் ஸ்தாபனத்தின் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளையும் திரு. ஹெவின் ஹென்றி பார்வையிட்டார் (20)

# 101சனசமூக நிலையங்களின் ஒன்றிணைந்த சமாசம்

(கொழும்புத்துறை)

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லைக்கு உட்பட்ட 101 சனசமூக நிலையங்களின் ஒன்றிணைந்த சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. எஸ். ஜெயமனோகரன்உரையாற்றுகையில் இன்று அமைய இருக்கும் சமாசம் பெயரளவில் செயல்படாது சேவை நோக்குடன் இப்பகுதி மக்களுக்குச் சமாசத்தாலும் சனசமூக நிலையங்களாலும் செய்யவேண்டிய பணிகளான சிரமதானப்பணி, நிவாரணம் இரத்ததானம், பதுங்குகுழி அமைத்தல், முதலுதவிச் சிகிச்சைகள் போன்ற பல அத்தியாவசிய சேவைகள்பற்றியும், அதன் செயற்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார். (24)

## செப்பனிடும் வேலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மிக மோசமாக பாதிக்கப்பட்டவீதிகளை செப்பனிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முழுமையான திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு மாநகரசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி இதுவரை கிடைக்கவில்லை என்றும் கிடைத்தகம்திருத்தவேலைகள் மேலும் விரிவுபடுத்தப்படும்என்று மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (க)


# A/L 90

## பொருளியல் மாணவர்களே! வெளிவந்துவிட்டது!

"பணம்" விலை ரூபா: 35/-

1984 – 1990 வரையிலான வினாக்களையும் விடைகளையும் உள்ளடக்கியுள்ளது
அத்துடன்
★ பண நிரம்பல் ★ பணத்தின் தொழிற்பாடு
★ பண வீக்கம் ★ பணச்சுருக்கம்
★ விலைச்சுட்டெண் ஆகிய விடயங்களையும்
உள்ளடக்கியுள்ளது.

"வங்கியியல்" விலை ரூபா 12-50
(சிறப்பாக இலங்கை பற்றியது)

ஆசிரியர்: திரு. மா. சின்னத்தம்பி

மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு:
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(R-2414)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

# வருடாந்தப்பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் 25. 5. 1991 சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் அவற்றினை 15.5.1991க்கு முன்னதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படியும்,

மதிய உணவில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 15.5.1991க்கு முன்னர் ரூ. 30/-ஐ உபபொருளாளர் திரு. ந. உலகநாதனிடம் செலுத்தி உதவும் படியும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நிகழ்ச்சிநிரல் அங்கத்தவர்களுக்கு அழைப்பிதழுடன் அனுப்பிவைக்கப்படும்.

யா. இ. க
24. 4. 1991

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்.
(B-2417)


## தந்தைக்கு மலரஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தந்தைசெல்வாநினைவு தினமான இன்று காலை முற்றவெளியில் உள்ள அவருடைய ஸ்தூபிக்கு மலர் அஞ்சலி செய்யும் வைபவம் இடம் பெற உள்ளது.

## 150பேர் அனுமதி

(கொழும்பு)

மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ் மொழி மூலமான பயிற்சி நெறிகளுக்கு 150 பேர் அனுமதி பெற்றுள்ளதாக கல்லூரியின் உப அதிபர் தெரிவித்துள்ளார். கடந்த வருடத்தைவிட இது இரு மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### விழுதுகள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெடியங்களுக்குப் படிப்பிக்கலாம். இதெல்லாம் போராட்டத்தில் ஒரு பங்களிப்புத்தான். உனக்கு வாயும் காதும்இருக்கு அதை மறந்திடாதே'' என்று தைரியமூட்டினேன். பின் அவனிடமிருந்து விடைபெற்றேன்.

போராட்டத்தில் நாங்கள் படிக்க வேண்டியது இன்னும் நிறைய உண்டு. இம்மாதிரியான சூழ்நிலையிலும் நான் படிப்பேன் படிப்பிப்பேன்என்று தைரியத்துடன் இருக்கும் இப்போராளிக்கு முன்னால் நாங்கள் கற்றுக் குட்டிகள். இப்படி எத்தனை போராளிகள்? உயிரின் இறுதிமூச்சு வரை தம்மால் இயன்றவரை எந்தெந்த வழிகளில் போராட்டத்துக்காக தம்மை அர்ப்பணித்து போராட முடியுமோ அந்தந்த வழிகளில் போராடி வரும் இந்தப் போராளிகளால் தான் போராட்டம் வலுப்பெற்று ஆத்மபலம்பெறுகிறது.

- கரும்பறவை

# நினைவு கூருகின்றோம்...

## 1991-04-26



## குணாஸ்
(முரசுமோட்டை)

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் சாம்பல் தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம் லெப்.சபேசன்** (அன்ரன்டெராஜ்-மூதூர்)

இதே ஆண்டு பட்டித்திடலில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள்.

1990 ஆம் ஆண்டு எதிர்பாராத வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**குணாஸ்** (முரசுமோட்டை)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2399)


# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி


எமது தலைமுறையில் கை கூடாவிடினும் நாம் இப்போரை நடத்தி எமக்குப் பின்வரும் சந்ததியினர் கையிற் கொடுப்பது எமது கடன. எம்பிலேனே அருமை பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். தலைநிமிர்ந்த தேசத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாக வாவது நம் இருப்போமாக.

- தந்தை செல்வா





உயிர் தரிக்க
ஒடிச் சலித்து
சுமக்க முடியாத
சிலுவைகளை சுமந்து
ஓய்ந்து போன
முதிர்வு – இது

நிர்க்கதியற்று
நிலைகள் தளர்ந்து
நிழல் மரம் தேடும்
உறவுகள் நீளும்
கனவுகள் வாழும்

விழிகளுள் நெருப்பு
வழிகளெழும் கிழக்கு
மௌனம் தவமாகி
மனசு சிறகு விரியும்
வேதனை கனக்கும்
விழிகளை நனைக்கும்

சூறைக் காற்று
சுழன்று வீசி
சுடு காடாகின
எமது குடிசைகள்

இரத்த சேற்றில்
மனித உடலகள்
மணணில புதைந்தன

மானிட மேன்மைகள்
ஒவ்வொரு பொழுதும்
உணர்வுகள் சிலிர்க்கும்

கொடுமைகள் துரத்தப்படும்
புதிய நம்பிக்கைகள்
சிறகுகள் விரியும்
மலரும் காலை
பொன் விடியலை
பூத்து நிறைவும

- டானியல் சௌந்திரன்




புதுவருடப் பிறப்புத் தினமான 14.4.91 அன்று காலை 11 மணி. யாழ்ப்பாணத்திலுள்ள மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத் தொடர்பகத்தில் ஓர் இளைஞன் விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கிறான. மனதில் உள்ள சுமைகளை இறக்குவதற்கு கண்ணீர் தான் ஒரே வழி என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்த அவனது நண்பர்கள் அவன் அழுதுமுடியட்டும் என்று காத்திருக்கின்றனர். அவனைச் சூழவும் பலர் கண் கலங்கியபடி நிற்கின்றனர். ''ஏன் அழுகிறான் ஷெல்டன்?'' என்று கேட்கிறான் ஒரு போராளி ''போனவருடப் பிறப்புக்கு அம்பாறையில சைக்கிள் ரேஸ் ஓடிப் பரிசு எடுத்தவன் இவன். அதை நினைச்சிட்டான். அதுதான் தாங்க முடியாம அழுகிறான்'' என்று பதில் கொடுக்கிறான் இன்னொரு போராளி. புதினம் பார்க்கும் தன்மை இல்லாமல் என்ன விஷயம்? ஏன் அந்தப் போராளி அழுது கொண்டிருக்கிறான்? என்பதை அறிய சுற்றிநிற்பவர்களை விலத்திக் கொண்டு என்னை நுழைத்தேன் அங்கே.. இரு கண்களையும் இழந்த... முழங்கைக்குக் கீழ மணிக்கட்டுடன் இரு கைகளையும இழந்த ஒரு பக்க நெஞ்சிசெல்லாம் காயங்கள் ஏற்பட்டதற்கான அடையாளங்களைக்கொண்ட அவனைக் கண்டேன், போராட்டக் களத்தில் தம்மை ஆகுதியாக்கிக் கொள்பவர்கள் அந்தக் கணத்தில் வேதனைகளை அனுபவிப்பதுண்டு. சிலர் மரணம் வருகின்றது என்பதையே தெரியாமல மரணிப்பதுண்டு, ஆனால் இம்மாதிரியான நிலையில் உள்ளவர்கள் ...? இதைப் போல் எத்தனை போராளிகள் தான் அங்கங்களை இழந்து... ஆனாலும் அவர்களில் இருந்து இவன் வேறுபட்டவனாக... போராட்டத்தின் இன்னொரு பக்கத்தின் சுமை நெஞ்சிலகனத்தது. இன்றைய மனோநிலை அந்தப் போராளியுடன் உரையாடுவதற்கு உகந்ததல்ல எனக் கருதிக் கொண்டேன். கண்ணின் முக்கியத்துவம், கையின் சுவசியம் எல்லாவற்றையும் சிந்தித்தபடியே ''நான் இன்னொருநாள் வருகிறேன்'' என்று தொடர்பகப் பொறுப்பாளர் மோகனிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

22.4.91 அன்று மீண்டும் தொடர்பகத்திற்குச் சென்றேன். மோகனிடம் தனியாக சிலவிபரங்களைக் கேட்டேன். நிந்தவூரைச் சேர்ந்த இந்தப் போராளி அம்பாறைமாவட்டத்தில் கண்ணிவெடிகளை வைக்கும் குழுவுக்குப்பொறுப்பாக இருந்தவன். ஒரு நாள் மிதிவெடிவைக்கும் போது அது வெடித்து இரு கைகளையும் கண்ணையும் இழந்துவிட்டான். அம்பாறையிலிருந்து மிகச் சிரமத்தின் மத்தியில இவனைக் கொண்டுவந்தார்கள் என்றார். ''இங்கே இப்போது எப்படி நடந்து கொள்கிறான் ஷெல்டன்?'' என்று கேட்டேன் ஒவ்வொரு பொருளும் இருக்கும் இடத்தையும அடைவதற்கு எத்தனை அடிகள் வைக்க வேண்டும் என்ற அளவுக்கு இந்த இடத்திற்கு பரிச்சயமாகிவிட்டான். மற்ற விஷயங்களை நீங்கள் நேரில் கேட்கலாமே!'' என்றார். ஷெல்டன் இருந்த அறையை நோக்கிப் போனோம்.

''வாழும் நாளில் எங்கள் தோழர் வாழ்ந்த வாழ்வை நினைக்கின்றோம'' என்ற செல்லப்பாவின் பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. பழைய நினைவுகளில் மூழ்கிக் கிடந்தான் ஷெல்டன். வெளியே அவனை அழைத்து வந்தான் மோகன். நட்புறவுடன் உரையாடல் ஆரம்பித்தது. குடும்பவிபரங்கள்போன்றவற்றை பரஸ்பரம் விசாரித்துக்கொண்டோம். கதைக்கக்கூட நெருக்கம் அதிகரித்தது. அதனால ஒரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்லுவீங்களா? என்றான் ஷெல்டன். கேளன் பாப்பம் என்டன. T.Vக்கு நடுவில் இருக்கிறதென்ன? என்று கேட்டான். இதென்ன பெரிய கேள்வி. திரை என்றேன.



ஷெல்டன்,

'இல்லை என்று கூறிய அவன் தொடர்ந்து நான் கூறிய ஒவ்வொரு பதிலையும் நிராகரித்தான். 'சறண்டர் பண்ணீட்டன் நீ சொல்லு' என்றேன். ஒவ்வொரு எழுத்தாச் சொல்லிக் கொண்டு போங்கோ. எஸ் ரீ.யூ.வி. எண்டு போகுமெல்லா. அப்பிடியெண்டா ரீ.வி.க்கு நடுவில உள்ளது யூ தான் என்றான். அசந்துவழியச் சிரித்தேன் இது நல்ல தருணம் எனக் கருதி இவன் கண்களையும, கைகளையும் இழக்கக் காரணமாக இருந்த சம்பவத்தை விசாரித்தேன்.

''வக்கும்பிட்டிய'', மாந்தோட்டம், தோணிக்கல், தராமலை, தங்கவேலாயுதபுரம் எல்லா இடமும் ஆமி வருகிட்டான. எல்லா மைன்ஸும் எடுத்துக்கொண்டம். ஒவ்வொண்டா வைச்சுக்கொண்டே வந்தம். கடைசி மைனஸ் சண்டை தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. நாம தடபும் எண்டு நினைக்கல்ல. இதுதான் வாழ்க்கையில நான வைக்கிற கடைசி மைனஸ் எண்டு சொல்லிக் கொண்டு புதற்றேற்றரை சரி பண்ணினன் வெடிச்சிற்றுது'' ...கொஞ்சநேர மௌனத்துக்குப்பின் தானே தொடர்ந்தான். ரெண்டு கைதான் இல்லமப் போச்சு. ஒரு கண்ணாவது இருந்திருக்கலாமே .. நான் வாழ்ந்து என்ன செய்ய? தற்கொலை செய்யலாமே எண்டு யோசிச்சன் அதுக்கும நிறையச் சந்தர்ப்பங்கள் கிடைச்சுது சண்டை நடக்கிறபோது என்னைக் கழுத்தளவு தண்ணீருக்குள்ள தூக்கிக்கொண்டுவந்தாங்க நம்மட பெடியனுகள். கண்தான் தெரியாட்டாலும் என்னால அதை உணரமுடிஞ்சுது. அப்பகூட சரிஞ்சு விழுந்து செத்திருக்கலாம். என்னைக் காப்பாத்தடபோய் நமபட பெடியனுகள் வீணாய்ச் சாகிறதை நான விரும்பேல்ல. ஆனா காயப்படுற பெடியன் ஒருத்தரையும குப்பி அடிக்க விடக்கூடாது எப்பிடியாவது காப்பாத்தி எங்கனட்டக் கொண்டு வாங்கோ எண்டு தலைவர் கண்டிப்பானஉத்தரவு போட்டிருக்கிறார்எண்டதால தலைவருடைய உத்தரவுக்குமாறானவிஷயத்தைச்செய்ய என்னாலமுடியல்ல .ஷெல்டனின் வார்த்தைகள் இனம்புரியாத உணர்வை ஏற்படுத்தின. இயக்கத்தில், தலைவரின் அந்தப் பையனுக்கு உள்ள விசுவாசம். இது புலிகளுக்கேஉரிய குணம. இது கருணாவின் வளர்ப்பு முறையின் வெற்றி என உணர்ந்து கொண்டேன்.

இதுக்குப்பிறகு நீ உன்ர குடும்பத்தைச் சந்திக்கேல்லையா? என்றுகேட்டேன். ''அவங்க எல்லாம் காரைதீவு அகதி முகாமில் இருக்கிறாங்கள். எனக்கு சின்னக் காயம எண்டுதான் தெரியும். அதுக்கே அழுதாங்களாம் எண்டு கேள்விப்பட்டன் என்று கூறிவிட்டு மௌனமானான். அவனது மனநிலையை உணர்ந்த நான் பேசாமல் இருந்தேன். வடிந்துகொண்டிருந்த கண்ணீரை மிஞ்சியிருந்த கையால் துடைத்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான் என்னைப பாத்திடடுப் போனஎன்டமாமா, அம்மாட தம்பி அவருக்குப பேர் மகேந்திரன். அவரும் இயக்கம்தான். சென்றிக்கெண்டு மலைக்குப் போனவர் என்னை நினைச்சுக்கொண்டு கவலையில குடிபிடைக் கடிச்சிட்டார்'' என்றான் கொஞ்சநேர அமைதிக்குப்பின் மீண்டும் உரையாடல் தொடர்ந்தது. ''அம்பாறையிலிருந்து இங்க வந்ததைப்பற்றி சொல்லன்'' என்றேன் என்னைக் கொண்டு வாறபோது நாலு இடத்தில றவுண்ட் அப். மழையும்கஷ்டப்படுத்திட்டுது. கொண்டுவந்த பெடியனுகளில ஒருத்தன் செத்துப்போயிட்டான. உன்னைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது நம்மட பொறுப்பு எண்டு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததால நானும் ஒண்டும் பேசல்ல. எப்பிடியோ மழைக்கும், ஆமிக்குமிடையால வந்து சேர்ந்திட்டன். காலில சின்ன முறிவு அதுவும் இடப சரிவந்திட்டுது'' என்றான்

''இப்ப என்ன மாதிரிப் பொழுது போகுது'' என்று கேட்டேன். வாறவங்க எல்லோருமே என்னோட வந்து கதைச்சிட்டுத்தான போவாங்க. செல்லப்பா பாட்டுகளைக் கேட்டுக்கொண்டிருப்பேன். நான் தலைவரைக் கேட்டு அரசியல் படிக்கப்போறன்'' என்றான். எனக்கு அவனது தன்னம்பிக்கைவியப்பூட்டியது பின்பும் அவனே தொடர்ந்தான். நான் மூன்டாம் வகுப்புத்தான் படிச்சனான். அதுதான யோசிக்கிறன் என்றான். ''இதில என்ன யோசிக்கக் கிடக்கு'' என்று கூறிய நான், நான் அறிந்த சில சாதனையாளர்களைப்பற்றிகுறிப்பிட்டு அவர்களெல்லாம இம்மாதிரியான சூழ்நிலையில் தான் சாதனை செய்தனர் என்பதையெல்லாம் குறிப்பிட்டேன். கால் சரியில்லாத நிலையில் ஆழிக்குமரன்ஆனந்தன் செய்த சாதனைகளைப்பற்றிதிரும்பத் திரும்ப விசாரித்தான். தான் அரசியல் படிக்க முடியுமென்ற நம்பிக்கை அவனுக்கு வலுப்பெறலாயிற்று.

அடுத்தமுறை நீங்கள் வாறபோது நான் கேள்விகள் கேட்பேன். நீங்கள் தயாரா வாருங்கோ'' என்றான் ''நீவேறுயாரிடமிருந்தாவதுகேக்கிறதமற்றப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# "உபதேசம்"

க. பொ. த. உயர்தரப் பரீட்சை, இறுதிநாள், இறுதிப்பாடம். இன்னும் ஐந்து நிமிடங்களே உள்ளன விடைத்தாள்களை ஒன்றாகக் கட்டிவிட்டு எழுதுங்கள். சுட்டெண் போட்டிருக்கிறதா என்று பார்த்துப் போடாதவர்கள் போட்டுக் கொள்ளுங்கள்."

பரீட்சை மேற்பார்வையாளர் கந்தப்பசேகரத்தின் அறிவித்தலைப் பயபக்தியோடு நிறைவேற்றுகிறார்கள் பரீட்சார்த்திகள். கடதாசிகள் படபடப்புத் தவிரப் பரீட்சை மண்டபம் முழுவதும் பேரமைதி,

'குதிரையோட்டங்கள், முதல்களும் முரடுகளுமான விடலைகளின் குறும்புச் சேட்டைகள், குசுகுசுப்புகள், நோக்குநர்கள் சற்றுக் கவலையீனமாயிருந்தால் பக்கத்துப் பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களை எட்டிப்பார்த்து எழுதப் பரபரக்கும் மேய்ச்சல் முயற்சிகள் முழுஉக்குறிகளான முணுமுணுப்புகள் என்று எதிலுமே இந்தக் கண்டங்களுக்குத் தப்பி, எவ்வித விக்கினமும் நேராது பரீட்சையை வெற்றியாக முடித்துவிட்டோம்' என்ற பெருமிதம் மேற்பார்வையாளரின் முகத்துக்குப் பிரத்தியேக களையை அளித்தது.

அவர் மிகவும் சாதுரியமானவர் அவருக்கு ஆடிக் கறக்கவும் தெரியும். பாடிக் கறக்கவும் தெரியும். முட்டவரும் மாட்டின் கொம்பைப் பிடித்து மடக்கி அடக்கவும் முடியும்.

பரீட்சைத் தொடக்க நாளன்று குதிரையோட முயன்ற ஒருவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து அவனைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கடுமையாக ஏசிப் பரீட்சை மண்டபத்திலிருந்து கலைத்தது பெரிய சாதனைதான்.

சாதனையின் முடிவில் அவர் பரீட்சார்த்திகளுக்கு ஐந்து நிமிடங்கள் நிகழ்த்திய சொற்பொழிவு இந்த நிமிஷத்திலும் அவர்களின் மனசெவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும் என்று அவர் உறுதியாக நம்பினார்.

"அன்பார்ந்த மாணவர்களே, நான் நேர்மையானவன். பாரபட்சம் நான் அறியாதது. நேர்மையற்ற செயல்கள் எவையாவது இந்தப் பரீட்சை மண்டபத்தில் இடம்பெற்றன் ? இப்பொழுது நடந்ததைப் பார்த்தீர்களா தானே? இந்த நிலைக்கு நீங்களும் ஆளாக விரும்புகின்றீர்களா? நிச்சயம் விரும்பமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். களவு பொய் ஏமாற்று, ஆள்மாறாட்டம் எதையும் நானோ இங்கு கடமையாற்றும் என் உதவியாளர்களோ சகிக்கமாட்டோம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கடவுள், மனச்சாட்சி பரீட்சை விதிமுறைகள் என்பவற்றுக்கு நாங்கள் கட்டுப்பட்டவர்கள் நீங்களும் இவற்றிற்குக் கட்டுப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். அப்படிக் கட்டுப்பட்டால் நீங்கள் எங்கள் இனிய நண்பர்கள். ஆம்! நீங்கள் இளம் பிள்ளைகள் என்றாலும் உங்களை எங்களுக்குச் சமமாக நட்புறவுடன் நடத்துவது எங்களுக்கு மகிழ்ச்சியை பேரும். அந்த மகிழ்ச்சிக்குத் தடவு செய்ய ஊறு விளைக்காதீர்கள் இது என் கட்டளை மட்டும் அல்ல பணிவான வேண்டுகோளுமாகும்."

கந்தப்ப சேகரத்தின் உபதேசம் எதிர்பார்த்த பயனை எதிர்பாராத அளவிற்கு வழங்கியது. இதன்பின் அவர் முகத்தில் கடுமை இல்லை. பரீட்சை நடந்த பதினைந்து நாள்களும் முகமலர்ச்சியுடனேயே காட்சி தந்தார். இடையிடையே நகைச்சுவைகலந்த கேலிகள், பரிகாசங்கள் மூலமும் பரீட்சார்த்திகளின் உளம் உள்ளங்களை அவர் கவர்ந்துகொண்டார்.

திறமையும் அனுபவமும் வாய்ந்த நிரந்தர நோக்குநர் அவருக்கு வாய்த்திருந்தபடியால உரிய இடங்களிலே அவ்வப்பொழுது கையொழுத்து இடும் ஒரு வேலையைத் தவிர வேறு எந்த வேலையும் அவருக்கு இருக்கவில்லை பணிவு நிறைந்த, அவர் என்னென்று சொல்ல முன் எண்ணெயாக ஏந்தி நிற்கின்ற சாதாரண நோக்குநர்களும் அவரின் பொறுப்புச் சுமையைப் பெருமளவு குறைத்ததும் அவர் வரையில் அதிர்ஷ்டந்தான்.

பரீட்சை முடிந்தது. விடைத்தாள்கள் பெறப்பட்டன பரீட்சார்த்திகள் பலரும் கந்தப்பசேகரத்துக்கும் உதவியாளருக்கும் நன்றி சொல்லி அவர்களின் வாழ்த்தைப் பெற்றுக் கொண்டு வெளியேறினார்கள்.

விடைத்தாள்கள் பொதியிடப்பட்டன அனுமதியட்டைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. வினாத்தாள்கள், மடக்கைகள் முதலிய ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டுப் பொதி செய்து எல்லாவற்றிற்கும் முத்திரை இடப்பட்டது தாம் குறிப்பேட்டில் குறைவேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன.

இறுதியாகக் கொடுப்பனவுப் பத்திரம் தயாரித்தல். நிரந்தர நோக்குநர் பரீட்சையிற் கடமையாற்றிய மேற்பார்வையாளர் முதலாக அனைவரதும் பெயர்களை வரிசையாக எழுதி அவர்களுக்கான கொடுப்பனவுத் தொகைகளையும் குறித்து முத்திரையிட்டு அவர்களின் கையெழுத்தைப் பெறும் பொழுதுதான் புதிய பிரச்சினை ஒன்று தோன்றியது.

"சேர்! பணியாளர் என்று உங்கள் மகன் ரவிராஜனின் பெயரை இட்டுள்ளீர்கள் அவரின் கையெழுத்துக்கு என்ன செய்வது?" என்று நிரந்தரநோக்குநர் தமது நியாயமான சந்தேகத்தை வெளியிட்டார்.

"உதுக்கேன் கடுமையாய் யோசிக்கிறீர்கள் உங்கள் என்ர மகனின்ர கையெழுத்தை நீரே இடக்கையால் போட்டு விடும்."

சொக்கன்

# ஏவுகணை உற்பத்தியில் மூன்றாம் உலக நாடுகள்

பாரசிக வளைகுடாப் போரில் ஈராக்கின் ஸ்கட்டும் அமெரிக்காவின் பேட்றியாட்டும் பலப்பரீட்சையில் ஈடுபட்டன. ஈராக்படையெடுப்பால் விளைந்த நெருக்கடியின் காரணமாக 3ஆம் உலக நாடுகள் தமது ஏவுகணைத் திட்ட இலக்குகளை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது

தரையிலிருந்து தரைக்குத் தாவும் அதிசக்தி வாய்ந்த நீண்ட தூர ஏவுகணைகளை உருவாக்கப் போவதாக ஜனவரி 29இல் ஈரான் அறிவித்தது இச் செயற்றிட்டம் ஒரு வருட காலத்துக்குள் உடன் தொடரும் என்று தெஹ்ரான் சுங்கணங்கட்டியது.

சோவியத் தயாரிப்பான ஸ்கட் - B யின் வடிவமைப்பை மாற்றிப் புதிய ஏவுகணைகளை ஈரான் தயாரித்துள்ளது இந்த ஏவுகணைகள் 800 கி மீ தூரம் வரையிலான இலக்குகளைத் தாக்கவல்லன

சோவியத் யூனியன் ஏவுகணை உற்பத்திப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள என்றாலும், சீனாவும் வடகொரியாவும் காத்திரமான விளக்கத்துடன் ஏவுகணை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன இதனால் இவ்விரு நாடுகளிடமும் தாராளமாக ஏவுகணைகள் உள்ளன.

இந்தியாவும் ஏவுகணைத் துறை உற்பத்தி முன்னேற்றத்துக்கான திட்டத்திற்குப் பரந்த அளவிலும், விவரமான நுண்தொழில் வகையிலும் அமைந்த முதல்தரமான ஒரு அடிப்படைத் திட்டத்தை வகுத்துள்ளது. இந்த வகையில் இந்தியா அதன் சொந்தத் தயாரிப்பான 'அக்னி'யை வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளது. மேலும், 'அக்னி' உற்பத்தி வரிசையில் முன்னேற்றமான இரண்டாவது 'அக்னி'யை பரீட்சித்துப் பார்ப்பதற்கு அமெரிக்கா முட்டுக்கட்டையாகவுள்ளது.

ஏவுகணையின் திறமைக்கு இன்றியமையாத நிபந்தனை அது செல்லக்கூடிய தூரமாகும். 1,000 கி மீ இருந்து 2,000 கி மீ வரை செல்லக் கூடியதும், தரையிலிருந்து தரைக்குத் தாக்கவல்லதுமான ஏவுகணைகளை இந்தியா உருவாக்கி வருகிறது. இந்த ரக ஏவுகணைகள் விரைவில் பரீட்சித்துப் பார்க்கப்படும் இந்தியாவின் செயல் முனைப்பின் விளைவாக, பாகிஸ்தானும் அதன் ஏவுகணைத் தொழில்நுட்பத்தை மீள் பரிசீலனை செய்யக் கூடும். இஸ்லாமாபாத் ஏவுகணை உற்பத்திப் போட்டியில் கடைசியாகவே உள்ளது. இருந்தும் சீனாவின் உதவியுடன் பாகிஸ்தான் ஸ்கட் I, ஸ்கட் - II குறுந்தூர ஏவுகணைகளை உற்பத்தி செய்துள்ளது. சீனாவும் பாகிஸ்தானின் வேறு பல ஏவுகணை உற்பத்தித் திட்டங்களில் கைவைத்துள்ளதாக உறுதியளிக்கப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன இந்தியாவின் 'அக்னி'யைப் போன்று 2,000 கி. மீ வரை பாய்ந்து தாக்கக்கூடிய ஆற்றலுடைய ஏவுகணைகளைப் பாகிஸ்தான் சீனாவின் தொழில் நுண்ணியலைப் பாவித்துத் தயாரித்து வருகிறது.

## ஐரோப்பிய நாடுகளின் அச்சம்

நவீன எந்திர சாதனத்தையும், தொழில் நுண்ணியலையும், அறிவியலையும் பயன்படுத்தியதால் 3ஆம் உலக நாடுகள் ஏவுகணை உற்பத்தியில் பிரமிக்கத் தக்கமுன்னேற்றத்தை அடைய முடிந்தது 3ஆம் உலக நாடுகளின் செயல் முனைப்பைக் கண்டு ஐரோப்பிய சமூகம் அச்சமடையத் தொடங்கியுள்ளது முதலாவது வளைகுடாப் போரில்

மதன்

ஈரானுக்கு எதிராக ஈராக் ஸ்கட் ஏவுகணைகளைப் பாவித்தமை, 3ஆம் உலக நாடுகளில ஏவுகணை உற்பத்தியில் கரிசனை காட்டும் அளவுக்கு

> முதலாவது வளைகுடாப் போரில ஈரானும், ஈராகவும ஏவுகணைகளைக் கணிசமான அளவு பாவித்துப் பொருதிக் கொண்டன. குவைத்மீது ஈராக் படையெடுத்ததன் விளைவாக ஏற்பட்ட இரண்டாவது வளைகுடாப் போரிலும் ஈராக் ஏவுகணைகளை உபயோகித்து எதிரி நிலையங்களைத் தாக்கியது. இதன் விளைவாக மூன்றாம் உலகநாடுகள் தமது பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் ஏவுகணை உற்பத்தித் திட்ட இலக்குகளைப் பலன் பொருத்தமாய் மாற்றியுள்ளன.

ஐரோப்பிய நாடுகளைத் தூண்டியது.

1987 இல் ஏழு ஐரோப்பிய நாடுகள் இணைந்து ஏவுகணை கட்டுப்பாடு அமைப்பை (MTCR) உருவாக்கியது இந்த அமைப்பு அதன் முதல் வேலையாக 300 கி மீ க்கு அதிகமாகச் செல்லக் கூடிய ஏவுகணைகளையும் அவற்றோடு தொடர்புடைய உதிரிப் பாகங்களையும் விற்பதற்குத் தடை விதித்தது.

## இந்தியாவின் பாதுகாப்பு


ஏனைய 3ஆம் உலக நாடுகளில் ஆயுத உற்பத்தியையும் ஆயுத பலத்தையும் சமாளிக்கக் கூடிய திறத்தை வளர்க்க வேண்டியது இந்தியாவின் முன்னேற்றத்துக்கும், பாதுகாப்புக்கும் அவசியமாகும் என்று இந்திய இராணுவ பாதுகாப்பு வட்டாரங்கள் உணரத் தலைப்பட்டன. தரையிலிருந்து தரைக்கு ஏவக் கூடியதும், ஆகாயத்திலிருந்து தரைக்கு ஏவக் கூடியதுமான நெடுந்தூர ஏவுகணைகள் இந்தியாவிடம் இல்லாதிருப்பது பலவீனமாகவும் கருதப்பட்டது. சீனா, கொரியா, பாக்கிஸ்தான், துருக்கி, ஈரான், ஈராக் ஆகியன ஏவுகணை உற்பத்தியில ஈடுபட்டுள்ளதால இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலையும், எழக் கூடிய வேறு விளைவுகளையும் இந்தியா ஒரு முன்னெச்சரிக்கையாகக் கொண்டது. இதனடிப்படையில் இந்தியாவும் அதன் ஏவுகணை உற்பத்தியை முடுக்கி விட்டுள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பு, ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (DRDO) 1983-ல் முதன்முறையாக ஒன்றிணைக்கப்பட்ட ஏவுகணைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத் திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஐந்து பரீட்சார்த்த ஏவுகணை உற்பத்தி முயற்சிகளில 'அக்னி'யும் ஒன்றாகும். அத்துடன் தரையிலிருந்து தரைக்கு ஏவும் 'தரிசூல்' 250 கி மீ தூரம்வரை ஏவக்கூடிய தரை ஏவுகணையான 'பிருதிவி'யும் முடிவுறும் நிலையில் உள்ளன.

## ஏவுகணைகளும் ஏனைய 3ஆம் உலக நாடுகளும்

ஈரானிடம் ஸ்கட் அதன் படைக்கலங்களுடன் ஏலவே சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஸ்கட்டைவிடக் குறுந்தூர ஏவுகணைகளான ஓரோப்புப, சாஹினும் ஈரான் கைவசம் உள்ளன. டாகிஸ்தான் ஏவுகணை உற்பத்தியில துருக்கிக்கும் கை கொடுக்க முன்வந்துள்ளது.

(7 ஆம் பக்கம் பார்க்க))



கவிதை

# மங்காது தளைத்திடும் மண்

ஒடியற் பிட்டும் ஒருதுண்டு பனாட்டும்எம்
விடிவுவரை பசிதீர்க்கப் போதாதோ - துடிப்பாக
நினைத்து வளர்த்து நிறைவாக ஆக்கிவைத்தாற்
பனை வளமே போதுமடா போ!

கோழிச் சூப்பு கொத்துரொட்டி புரியாணி
கேளிக்கைச் சாப்பாடு ஏதுக்கு - தாளித்து
கமகமக்க விட்டாலும் களத்தினிலே நிற்கின்ற
சமயத்திற் சோயாவை நாடு!

வாழைப் பழமும் வாசப் பலாச்சுளையும்
ஏழைக் குதவும்மாம் பழத்துண்டும் – நாளைநம்
நாட்டிற் பசிபோக்கும் மரத்தறிப்புச் செய்யாதே
வீட்டில் நட்டுவைத்துக் கார்!

தென்னங் குரும்பை தித்திக்கும் முட்டுக்காய்
வன்ன வழுவல் வருமிளநீர் – இன்னலற
ஓலைக் கிடுகு ஒதுக்கீக்குக் கட்டெல்லாம்
நாலைந்து தென்னைவைத்துப் பார்!

வீட்டு முகப்புகளில் விந்தைதரு சாடிகளில்
காட்டுக் குரோட்டன்கள் ஏதுக்கு? - நாட்டில்
வெங்காயம மிளகாய் வெண்டியொடு தக்காளி
மங்காது தளைத்திடுமெம் மண்!

த. நாகேஸ்வரன்

# தீர்க்கதரிசனம் மிக்க தலைவர்

## தந்தை செல்வா

330 ஆண்டுகால (1619-1947) ஐரோப்பியர் ஆட்சியில இறைமை இழந்து அடிமையிருந்த தமிழர்களை, ஆங்கிலேயரின் 115 (1833-1947) ஆண்டுகால ஐக்கிய இலங்கை ஆட்சியில் சிங்களவர்களுடன் கட்டாயமாக இணைந்து வாழ்ந்த தமிழர்கள் தமது முந்தைய மேன்மை நிலையை மறந்திருந்த காலத்தில, ஆங்கிலேயர் ஆட்சி அகன்ற வேளையில, (1947இல) தமிழர்கள் பழைய மேன்மைய சிறப்பை மீளப்பெற வேண்டுமென்றும், தமிழன் தனித்துவம் பேணப்பட வேண்டும் என்றும் முதன் முதல் குரல் கொடுத்த மாமனிதர் தந்தைசெல்வா அவர்கள்.

இணைப்பாட்சி அமைப்பின் கீழ்தான் தமிழ்மக்களும் சிங்கள மக்களும் இலங்கைத்தீவில் சமத்துவமாக இணைந்துவாழ முடியும் என்றும், ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் தமிழ் மக்கள் அடிமைப்படுத்தப்பட்டு விடுவர் என்றும் அன்றே எச்சரிக்கை ஒலி எழுப்பினார் தந்தை செல்வா.

மலையகம், மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் என பிரதேச வேறுபாடுகளினால் கூறுபட்டிருந்த தமிழ் மக்களை ஓரணியில் ஒன்று திரட்டியவர் தந்தை செல்வா.

அடிமை உணர்வு கொண்டிருந்த தமிழ்மக்களுக்கு உரிமை வேட்கையை, சுதந்திர உணர்வை ஊட்டி தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அடித்தளம் அமைத்தவர் தந்தை செல்வா.

1898 மார்ச் 31இல் மலேசியாவிலுள்ள ஈப்போ நகரில் பிறந்த தந்தை செல்வா ஆரம்பக்கல்வியை தெல்லிப்பளையிலும் யாழ்ப்பாணத்திலும் கற்று, உயர்கல்வியை கொழும்பில் முடித்து வெஸ்லி, சென்தோமஸ் கல்லூரிகளில் விஞ்ஞான, ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார். அத்தோடு சட்டக்கலவி பயின்று நாட்டின் சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார்.

1947இல் தனது 49 வயதில தமிழ்காங்கிரஸ் கட்சி மூலம் அரசியல் வாழ்வில் நுழைந்த தந்தை செல்வா தனது நேர்மையான உறுதியான நடவடிக்கைகளின் மூலம் தமிழ்மக்களின் ஏகோபித்த தலைவரானார்.



தந்தை செல்வா

பொன்னம்பலம் இராமநாதன் போன்ற பிற்போக்கு சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கொண்டிருந்த தலைவர்களை அதுவரைபெற்றிருந்த தமிழர்களுக்கு தந்தை செல்வா விடிவெள்ளியானார்.

"படித்தவர்களுக்கே வாக்குரிமை தேவை பாட்டாளிகளுக்கு அல்ல" என்று வாதாடி அனைத்து மக்களுக்குமான வாக்குரிமையை எதிர்த்த பொன். இராமநாதன் நிலை போலன்றி பாட்டாளிகளான மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமைகளுக்காக குரல கொடுத்து தனது அரசியல் நுழைவுக் காலத்திலேயே அரசியல் களத்தில் எதிர்நீச்சலடித்தவர் தந்தை செல்வா.

30 ஆண்டுகள் (47-77) தமிழ் மக்களுக்காக உரிமைக் குரலெழுப்பி அரசியல போராட்டங்களை நடத்தி சிறை வாழ்வையும், பொருளிழப்புக்களை உட்பட பலவேறு இழப்புகளையும் இன்னல்களையும் ஏற்ற முதல் தமிழர் தலைவர் அவர்.

1947 - 77 காலத்தில் தமிழ் மக்களின் தலைவராக இருந்த தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்களுக்கு நேர இருந்த அரசியல் பாதிப்புகளையும், இடர்களையும் சுட்டிக்காட்டி அவர் ஆற்றிய உரைகள், கூறிய கூற்றுக்கள் தீர்க்கதரிசனமானவை. பின் நிகழ இருப்பனபற்றி முன்கூட்டியே அறிந்து முன்கூட்டியே தமிழ் மக்களுக்கு எடுத்துரைத்து தமிழ் மக்களை விழிப்படைய வைத்தவர் அவர்.

பிரிட்டிஷார் இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதுபற்றிய பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தும் 1947 டிசம்பர் 1ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில "இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. எல்லோரும் கொண்டாடுவோம் வாருங்கள்" என்று அன்றைய பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவால முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது இடைமறித்த தந்தை செலவா அவர்கள், "இந்த நாட்டை ஆளும் பொறுப்பில் பங்குகொள்ளும் உரிமை (சுதந்திரம் கிடைத்த பின்) புதியஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கு வழங்கப்படாது விட்டால் எமக்குக் கொண்டாடுவதற்கு எதுவித காரணமும் கிடையாது."

"அரசாங்கத்தில் பங்கு கொள்வது என்பது எந்த விலை கொடுத்தும் அமைச்சரவைக்குள் நுழைந்துகொள்வது அல்ல. மொழியினடிப்படையில் வேறுபட்ட பிரிவினர் ஒருவர் இருந்தால் அவர்களது அரசியற் பலம் நாட்டின் அரசாங்கத்தில் தெரியக் கூடியதாக இருத்தல் வேண்டும். நாட்டின் அரசாங்கத்திலோ, எதிர்க்கட்சியிலோ அல்லது பொதுவான ஆட்சியமைப்பிலோ தனது அரசியற் பலத்தை உணரவைக்க முடியாத அத்தகைய பிரிவினருக்கு சுதந்திரம் என்பதிருக்க முடியாது."

"இந்த நாட்டின் அரசாங்கத்தின் மீது தமது செல்வாக்கை அரசியல் ரீதியில் பிரயோகிப்பதில் சம அந்தஸ்தும் சம அதிகாரமும் எனது சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்படாதிருக்கும் போது நாம் (சுதந்திர) கொண்டாட்டத்தில் சேர்ந்துகொள்வது சாத்தியமேயில்லை என ஒளிப்பு மறைப்பின்றி நான் சொல்லிவிட விரும்புகிறேன்" என முழங்கினார் தந்தை செல்வா.

இலங்கைத் தீவில் சுதந்திரம் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை. சுதந்திரத்தை தமிழ் மக்கள் கொண்டாட முடியாது என தந்தை செல்வா அவர்களால் கூறப்பட்ட கூற்று இன்றுவரை தமிழ் மக்களுக்கு பொருந்துவதாக தமிழ் மக்களால கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக உள்ளது.

10-12-48இல், இந்திய குடியுரிமைச் சட்ட விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் உரையாற்றிய தந்தை செல்வா, "இது இந்திய சமூகத்துக்கு எதிராக மட்டுமல்லாத (இந்த நாட்டிலுள்ள) ஒவ்வொரு சிறுபான்மைச் சமூகத்துக்கும் எதிரான பாரதூரமான ஓர் அநியாயம் என்று நான் சொல்கிறேன்."

"இச்சட்டத்தைக் கொண்டுவந்த பிரதமர் இன்று எம்மை (இலங்கைத் தமிழரை) நேரடியாகத் தாக்கவில்லை. ஆனால் மொழிப் பிரச்சினை கிளம்பும்பொழுது நாம் எங்கே நிற்கிறோம் என்பது எமக்குத் தெரியவரும். இத்தகைய சட்டவாக்கத்தொடரில் (இந்த இந்திய குடியுரிமைச் சட்டமூலத்தை) அடுத்துவரப் போவது மொழி தொடர்பான சட்டவாக்கமாகத்தானிருக்கும். அத்துடன் நின்று விடுவார்கள் என்றும் கூற முடியாது." என்று எச்சரித்தார் தந்தை செல்வா.

அவர் 948 இல் கூறியபடியே தமிழ்மக்களுக்கு எதிராக அடுத்து கொண்டுவரப்பட்ட சட்டமூலம் (1956 ஜூன் 5இல்) சிங்களம் மட்டும் ஆட்சி மொழிச் சட்டம். தந்தை செல்வா அவர்கள் தொடர்ந்து கூறியதுபோல சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கள ஆட்சி மொழிச் சட்டத்துடன் நின்றுவிடாது இன்று வரை தொடர்ந்தும் தமிழின விரோத சட்டங்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்வதை நிறுத்தவில்லை.

"சுதந்திரம் வேறொருவர் கொடுக்க நாம் பெற்றுக் கொள்ளும் பொருளல்ல. அது சுக்குமல்ல; மிளகுமல்ல. மக்களின் இரத்தாலும் தியாகத்தாலும் விடாமுயற்சியாலும் மக்கள் அடையும் ஓர் உன்னத நிலைதான் சுதந்திரம். உலக வரலாற்றை எடுத்துப் பார்த்தால் சுதந்திரப் போராட்டம் நடத்திய எவ்வினமும் பலவீனமான இனமாகவே இருந்தது என்பது புலப்படும். பலம் குறைந்த நேரத்திலதானே ஓர் இனம் தன் சுதந்திரத்தை இழப்பது. அவ்விதம் இழந்த இனம் தன் பலவீன நிலையைப் பாராட்டிக் கொண்டு சுயாதீனப் போரில் இறங்காமல் நிற்குமாயின் விடுதலை எப்போ அடையும்? விடுதலை அடைந்த ஒவ்வோர் இனத்தின் வரலாற்றையும் ஆராய்ந்தால் அவ்வினம் தம் மனோதிடத்தினாலேயே வெற்றியடைந்திருக்கிறது."

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மேதினமும் ஈழ விடுதலைப் போராட்டமும்

மேதினம், தொழிலாள வர்க்கத்திற்கான ஒரு திருநாள். உலகெங்கும் பரந்து வாழும் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து கொண்டாடும் எழுச்சிநாள். இத்தினத்தை தமிழ் ஈழமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வரவேற்க வேண்டும. வீரசபதம் வேண்டி நிற்கவேண்டும். தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும் இதற்குமிடையில் தொடர்பென்ன? முதலாளி - தொழிலாளி வர்க்கங்களுக்கிடையிலான போராட்டமன்றோ மேதினம், எனப் புத்திஜீவிகள் பலர் முணுமுணுக்கின்றனர். இப்போராட்ட முயற்சியை, வெற்றியை நாம் சரியாக இனங்காண வேண்டும். மேதினம முதலாளி - தொழிலாளிக்கிடையிலான ஊதியத்திற்கான போராட்டம் மட்டுமன்று. அது ஒரு புறத்தோற்றம் மட்டுமே. உண்மையில் அது மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டமே காலம் காலமாகத் தெரிந்திருந்தும் திட்டமிட்டு அடிமைப்படுத்தும் மனோபாவத்திற்கு எதிரான போராட்டம். இம்முரண்பாடு இனங்களுக்கிடையிலும் ஏற்படலாம். பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை இனரீதியாக திட்டமிட்டு அடக்கி ஒடுக்கும்போது அந்த மேலாதிக்க மனோபாவத்திற்கு எதிராகப் போராட வேண்டியது தர்மமாகின்றது. இந்த முயற்சியில் உண்மையை உணர்ந்த ஒவ்வொரு ஈழத் தமிழனும் முனைந்து நிற்பதால் மேதினத்தை நாம் ஒரு எழுச்சி நாளாகக் கொண்டாட வேண்டும்.

அன்று அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளி - தொழிலாளி என்ற வர்க்க ரீதியான இனம் பரந்து காணப்பட்டதால் முதலாளி வர்க்கத்திற்கெதிராக தொழிலாள வர்க்கம் ஒன்றிணைந்து குரல்கொடுத்தது. 1886 மே முதலாந் திகதி அமெரிக்காவின் தொழிற்பேட்டைகளை அண்டித் தொழிலாளரின் எழுச்சிக்குரல் ஒலித்தது. 1889 இல் அந்தப் போராட்ட முயற்சி பல உயிர்த்தியாகங்களுடன் வெற்றி பெற்றது. அந்தத் தினத்தையே உலகெங்கும் வாழும் தொழிலாளர்களும், அடக்குமுறைகளுக்காளாகுபவர்களும் கொண்டாடுகின்றனர். தமிழ் ஈழ மக்களின் இன்றைய நிலையில் முதலாளி - தொழிலாளி என்ற வர்க்க வேறுபாடு [illegible] பேசித் தீர்க்க வேண்டிய முரண்பாடாகும். இதைவிட முக்கியமான முரண்பாடு இனரீதியான முரண்பாடாகும். அரசியல், பொருளாதாரம், கலாசார ரீதியாகத் திட்டமிட்டு அடிமைப்படுத்தும் சிங்களப் பேரினவாதத்திற்கெதிராகத் தமிழ்ஈழ மக்கள் அனைவரும் இன்று ஒன்றுபட வேண்டும். எமது சிந்தனைகளும் செயற்திட்டங்களும் சிங்கள இன வெறி அரசுக்கு எதிரானதாக அமையவேண்டும்.

தமிழ் ஈழத்திலும், சிங்கள இலங்கையிலும் வாழும் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற கோஷம் அர்த்தமற்றது. பரந்துபட்டு வாழும் தொழிலாளவர்க்கத்தை ஒன்றுதிரட்டி முதலாளி வர்க்கமான ஆளும் கட்சியை ஆட்சியிலிருந்து வீழ்த்த வேண்டும் என்று கூறுவது எமது வரலாற்றை அறியாத - நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தின் அடிப்படையை உணராத கற்பனைக் குரலாகும். இந்த மேதின விழா எம்மத்தியில் ஒரு புதிய பரிணாமத்தைப் பெறுகிறது. வர்க்க முரண்பாட்டிற்கு மேலாக, இனரீதியான முரண்பாட்டை திட்டமிட்டு வளர்த்து, தமிழ் இனத்தை வாழும் நாட்டை வேரோடு அழிக்க தனது சகல வளங்களையும் சிறிலங்கா அரசு எமக்கெதிராகத் திருப்பும் போது நம் இலங்கைத் தொழிலாளவர்க்கம் அனைத்தையும் ஒன்றுதிரட்டுவது என்பதும் அதன் மூலந்தான் புரட்சி வெடிக்கும் என்பதும் யதார்த்தத்திற்குப் பொருந்தாத ஒன்று.

> மேதினம் முதலாளி — தொழிலாளிக்கிடையிலான ஊதியத்திற்கான போராட்டம் மட்டுமன்று, அது ஒரு புறத்தோற்றம் மட்டுமே. உண்மையில் அது மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டமே, காலம் காலமாகத் தெரிந்திருந்தும் திட்டமிட்டு அடிமைப்படுத்தும் மனோபாவத்திற்கு எதிரான போராட்டம்.

இலங்கை அரசியல் வரலாற்றில் எத்தனையோ அனுபவங்களைப் பெற்றபின்பும் வர்க்க ரீதியான இன ஒற்றுமை பற்றிப் பேசுவதும், மார்க்சிய, லெனினிச சித்தாந்தங்களைச் சரியாகக் கற்கவேண்டும் என்பதும், இடதுசாரிமனோபாவம் உள்ளவர்களே உண்மையை உணர்வார்கள் என்று தம்மை உயர்த்துவதும் பொருந்தாது. மார்க்சின் கோட்பாட்டை லெனின் எப்படித் தமது அணுகுமுறைக்கு ஏற்ப பயன்படுத்தினாரோ, கியூபாவின் அமைவுக்கு ஏற்ப கஸ்ரோ பயன்படுத்தினாரோ, தொழிலாளவர்க்கம் தமது முழுமையான வெற்றிக்குப் பயன்படுத்தினார்களோ, அதேபோன்று எமது ஈழமண்ணினதும் - தமிழ் மக்களினதும் அமைவிற்கும் தேவைக்கும் ஏற்ப மேதின விழா புதிய வடிவத்தைப் பெறவேண்டும்.

19 9இல் உருவாகிய இலங்கைத் தொழிலாளர் நல சங்கத்தில் பணியாற்றிய A. E. குணசிங்கா, தனிக்கட்சி அமைத்து இன வெறியைத் தூண்டிய அன்றே இதை நாம் புரிந்திருக்கவேண்டும். 1950-ல் உள்நாட்டுப் பயிர்ச் செய்கை என்ற போர்வையில் திருக்கோணமலையில் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றபோது அவசரமாகக் களனிமாநாட்டைக்கூட்டி 'சிங்களம் மட்டும்' என்ற தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த போது, உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று கூறிய இடதுசாரிக் கட்சிகள் "தோசை, மசால வடை அப்பிட்ட எப்பா" (தோசை, மசாலவடை எமக்கு வேண்டாம்) என்று தொழிலாள ஊர்வலத்தில் கோஷமிட்ட போது. உணர்ந்திருக்கவேண்டிய நாம், இன்றும் இதைப் புரியாது வாழ்வது, எதிர்கால சமூகத்திற்குச் செய்யும் துரோகமாகும். இதைப் புரிந்துகொண்ட தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை இந்த மேதினத்திலிருந்து அனைத்து மக்களும் முன்னெடுத்துச் செல்லவேண்டும். அரசியல், பொருளாதாரக் கலாசார விடுதலையாக, இப்போராட்டம் வடிவெடுக்க வேண்டும். தமிழ்ஈழ மண்ணில் முதலாளி - தொழிலாளி முரண்பாடுகள் பேசித் தீர்க்கவேண்டும்.

**பாலன்**

# வடக்கு கிழக்கு கரையோரங்களில் பெறுமதி மிக்க றைற்றேனியம்

21ஆம் நூற்றாண்டின் உயர்தொழில் நுட்ப தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருளான றைற்றேனியம் என்னும் உலோகம் வடகிழக்கு கடற்கரையோரங்களில் பெருமளவில் காணப்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இவ்வுலோகமானது நவீன யுத்த விமானங்களாகிய எவ் - 14 போன்றவற்றிற்கும் சுப்பர் சொனிக் விமானங்களின் தயாரிப்பிற்கும் அத்தியாவசியமானதாகும்.

மிகவும் பாரங்குறைந்ததும் உறுதியானதுமான கலப்பு லோகத் தயாரிப்பில் இது பயன்படுகிறது. உலகிலேயே மிகவும் கூடியளவான இவ்வுலோகத்தின் தாதுப்பொருளாகிய இல்மனைற், சிலப்புறூட்டைல் என்பன புல்மோட்டை கடற்கரைகளில் 10கி லோமீற்றர் நீளமான பகுதியில் சராசரி 100 மீற்றர் அகலத்திற்குக் காணப்படுகிறது. கணிப்பீடுகளின் படி 4,000,000 தொன் கனிப்பொருள் மணல் இப்பகுதியில் பெறக்கூடியதாக இருக்கும். இம்மணலானது 70 வீதம் இல்மனைற்றையும் 10 வீதம் சிர்கோனையும் 8 வீதம் றூட்டைலையும் 0.3 வீதம் மொனோசைற்றையும் கொண்டுள்ளது. இவற்றில் இல்மனைற்றும் றூட்டைலிலும் றைற்றேனியத்தின் தாதுப் பொருள்களாகும். இம்மணலிலிருந்து ஏறத்தாழ 50 சதவீதமறைற்றேனியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இதுவே உலகின் மிகச்சிறந்த தரம் கொண்டதாகும். இக்கனிப்பொருள் மணலின் தற்போதைய 1990 இல் விலை தொன்னொன்றிற்கு 65 டொலராகும். 1988ஆம் ஆண்டில் மட்டும் ஏற்றுமதிமூலம் 151, 91000 ரூபாவை இலங்கை வருமானமாகப் பெற்றுள்ளது.

மேலும் முல்லைத்தீவு தொடக்கம் நிலாவெளி வரையான பிரதேசக் கடற்கரைகளில் 3,000,000 தொன் இல்மனைற்று 6,000,000 தொன் றூட்டைல் 4,000,000 தொன் சிர்கோன் என்பன பெறப்படமுடியும்.

> உயர் தொழில் நுட்பமுடைய நவீன யுத்த விமானமான எப் - 4 க்கும் போக்குவரத்து விமானமான சுப்பசொனிக் உற்பத்திக்கும் றைற்றேனியம் முக்கியமானதாகும்

இவற்றில் சிர்கோன் மட்பாண்டப்பொருள் தயாரிப்பிற்கும் மொனோசைற் தோறியம் எனப்படும் அணுசக்தி மூலப்பொருளுக்கும் பாவனைப் படுத்தப்படும் மேலும் வர்ணத்தயாரிப்பு, பிளாஸ்ரிக் பொருள்கள் தயாரிப்பிற்கும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

## சிவபாலன்

## தீர்க்கதரிசனம்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ஐரிஸ் மக்களை தமிலும் பன்மடங்கு பலம் மிகுந்த ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து தம சுதந்திரத்தைப் பிடுங்கிக் கொண்டார்கள்'' என்று 1945 இல் தமிழரசுக்கட்சியின் முதலாவது மாநாட்டுத் தலைமையுரையில் தமிழ்மக்களுக்கு சுதந்திரக்கனவை மூட்டிய தந்தை செல்வா, 'எமது தலைமுறையில் கைகூடாவிட்டாலும், நாம் இப்போரை நடத்தி எமக்குப் பின்வரும் சந்ததியினர் கையிற் கொடுப்பது எமது கடன். எம் பின்னேவரும் பெரும்வீரர்களை எம்மினம் பெறக்கூடும். ஆனைந்த படசத்தை அவர்களுக்கு அணிவகுப்பவர்களாக அவது நாம் இருப்போமாக'' என்று அதே மாநாட்டில் அவர் கூறிய கூற்று. இன்று விடுதலைப் போரை வீறுடன் நடத்திவரும் விடுதலைப் புலிகளையும் தானைத்தலைவர் பிரபாகரன் அவர்களையும் பற்றி அன்றே கூறியது போலாகும்.

இணைப்பாட்சி பெற்ற சிங்களவர்களோடு சரிநிகர்சமானமாக இணைந்து வாழலாம் என 20 ஆண்டுகளாக இணைப்பாட்சிக்காகப் போராடிய தந்தை செல்வா அதற்காக பல போராட்டங்களை நடத்தி சிங்களத் தலைவர்களுடன் பல உடன்பாடுகளையும் செய்து பார்த்த தந்தை செல்வா சிங்களத் தலைவர்களாலும், சிங்கள மக்களாலும் இணைப்பாட்சி ஆலோசனை முற்றாக நிராகரிக்கப்பட்டதையடுத்து தமிழீழத் தனியரசு ஒன்றே தமிழர்க்கு தீர்வு என முடிவெடுத்தார்

''தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் ஒருகாலத்தில் கூட்டாட்சி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால், கூட்டரசு மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியப்படாது என்பதை கடந்தகால அனுபவங்களின் மூலம் இப்போது நாம் அறிந்துகொண்டுவிட்டோம்.''

'இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்துவாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தமது இழந்த உரிமைகளை ஒருபோதும் மீட்டுக்கொள்ள முடியாது. எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர் அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சி வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஓர் இடம் இருக்கிறது, எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை இழந்த எங்கள் உரிமையான அரசை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்''

'தனித்தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது தனித் தமிழ் ஈழம் நிறுவுவது சுலபமான காரியமல்ல என்றும் மிகவும் கடினமானதென்றும் எங்களுக்குத் தெரியும். எமக்குள்ள நிலை இரண்டு. நாம் ஒன்றில் சிங்களவர்களின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும். அல்லது அழிந்து போகவேண்டும். எனவே நாங்கள் போராடி தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம். நாங்கள் கூட்டாட்சி கோரிக்கையை அடியோடு கைவிட்டுவிட்டோம் எங்கள் தனிநாட்டுக்கான இயக்கம் அமைதி வழியிலேயே நடைபெறும்'' என்று 9-11-76 இல் பாராளுமன்றத்தில் அவர் இறுதியாக பேசும்போது பிரகடனம் செய்தார்

தந்தை செல்வா அகிம்சை முறையைக் கடைப்பிடித்தாரே தவிர ஆயுதப்போராட்டம் தீமையானது தவறானது என்று என்றுமே அவர் கூறவில்லை. சிங்களவர்களுக்கு அடங்கி அடிமைப்பட்டுக் கிடப்பது ஆயுதமெடுத்து அவர்களுக்கெதிராக போராடுவது அகிம்சை முறையில் அமைதியாகப் போராடுவது ஆகிய மூன்று நிலைகள் தான் தமிழர்க்கு உண்டு என்று கூறிய தந்தை செல்வா, சிங்களவர்களுக்கு அடிமையாக இருக்கும் முதலாவது நிலையை முற்றாக நிராகரித்தார். ஆயுதமேந்தும் வன்முறைப் போராட்டம் அன்றைய சூழ்நிலையில் இயலாதது என்பதால் அதை விடுத்து தன்னால் இயலக்கூடிய மூன்றாவது நிலையான அகிம்சை முறையைத் தேர்ந்தெடுத்ததாகத்தான் அவர் அடிக்கடி கூறிவந்தார். ஆயுதம் எடுத்துப் போராடிய சிவகுமாரன் சிலைக்கு மாலை அணிவித்தார் துரையப்பா கொலை வழக்கில் ரயல் அட் பார் வழக்கில் கறுப்புக் கோட் போட்டு முதல்நாள் கலந்து கொண்டார். தமிழீழத்தை எப்படியும் பெறவேண்டும் என்ற தணியாத தாகம் அவருக்கு இருந்தது.

அவர் மறைவதற்கு முன் இறுதியாகக் கலந்து கொண்ட கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற சட்டக்கல்லூரி தமிழ்மன்ற விழாவில் பேசமுடியாத நிலையில் வாசிக்கும் படி அவர் எழுதிக்கொடுத்த அறிக்கையில், ''எனது வாழ்நாளுக்குள் தமிழீழத்தைப் பெறமுடியும் என்று நினைக்கின்றேன் என்வாழ்நாளில் தமிழீழம் கைகூடாவிட்டாலும் அடுத்த இளஞ்சந்ததியினர் போராடி தமிழீழத்தைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கையுடன் என் கண்களை மூடுவேன்'' என்று அடுத்த சந்ததியினர் மீது அத்தனை நம்பிக்கை வைத்துக் கூறினார்.

தந்தை செல்வா மறைந்ததன்பின் அவர் பெயரில் கட்சி நடத்தியவர்கள் தமிழீழத்துக்காக எதுவித போராட்டத்தையும் நடத்தாதது மட்டுமல்ல, தமிழீழத்தையும் கைவிட்டு, தந்தை செல்வாவால் ஏற்கெனவே கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இணைப்பாட்சிக்குக் கீழான சலுகைகளைப் பெற்று வாழச் சம்மதித்து தந்தை செல்வாவுக்கும் தமிழினத்துக்கும் துரோகமிழைத்தனர். சீனாவின் தந்தையான சன்யாட்சென் அவர்களின் வாரிசெனக் கூறப்பட்ட சியாங்கே ஷேக் சீனமக்களின் துரோகியானதுபோல தந்தை செல்வாவின் ''வாரிசுகள்'' தமிழீழத்தின், தமிழினத்தின் துரோகிகளாகிவிட்ட போதிலும், சீனாவின் தந்தை என்று சன்யாட்சென் போற்றப்படுகிறார். அதுபோன்றே தமிழீழ வரலாற்றிலும் தந்தை செல்வாவுக்கு சிறப்பான தனியிடமுண்டு. 14ஆவது நினைவு நாளில் தந்தை செல்வா தமிழீழ மக்களுக்கு ஆற்றிய பணிகளை நாமும் நினைவு கூருவோம்.

---

## அன்றும் இன்றும்

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை 3-12-61 அன்று 678 பக்கங்களில் ஞாயிறு மலர் வெளியிட்டது அதன் எடை 6 றாத்தல் சுமார் 15 லட்சம் பிரதிகள் அச்சடிவதற்குத் தேவைப்பட்ட காகிதம் 4500 தொன் இவ்வளவு கடதாசிக்கும் தேவைப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 77ஆயிரம். இந்த மரங்கள் வெட்டப்பட்டதால் காலியாகிய காட்டுப் பகுதியின் பரப்பு 360 ஏக்கர்

---


பனைத் தொழில்நுட்ப பயிற்சிக்கான

## விண்ணப்பம், கோரல்

வடமராட்சிப் பகுதியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனைப்பண்ணையில் பனைத்தொழில் நுட்ப பயிற்சிகள் பெறுவதற்குத் தகுதியான ஆண் பெண் இருபாலார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள்யாவும் 1991. 04. 30ஆம் திகதிக்கு முன்பாக'' பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம், 25, பொன்னப்பா வீதி, வண்ணார்பண்ணை - யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கல்வித்தகைமை;

1. விண்ணப்பதாரிகள் 16வயதுக்குமேற்பட்டவராகவும்,
2. மூன்றாவது (3) வகுப்பு சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
3. உயர்கல்வி பெற்றவர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகள்:

அ. நவீன தொழில்நுட்ப ரீதியில் பதநீர் சேகரித்தல்.

ஆ. நவீனதொழில்நுட்ப ரீதியில் பனம்பாகு, பனைவெல்லம், பனஞ்சீனி உற்பத்தி.

இ. பனைசார் கைப்பணி அழகுப் பொருள்கள், பனம் தும்பு, ஈர்க்கு, நார் உற்பத்தி.

கூட்டுறவு நிர்வாக செயற்பாடுகளிலும், தொழில் முகாமைத்துவ திலுமான பயிற்சிகள்.

பயிற்சிக்காலம் :- மூன்று (3) மாதங்களாகும்.

குறிப்பு:- பயிற்சிக் காலத்தில் 'அ' 'ஆ' பிரிவினர்க்கு உணவு, தங்குமிடவசதிகளுடன் உதவுதொகையாக 'அ' பிரிவினர்க்கு ரூ. 1000/- 'ஆ' பிரிவினர்க்கு ரூ 500/-வழங்கப்படும். 'இ' பிரிவினருக்கு மதிய உணவுடன் மாதாந்தம் ரூ 300/- உதவு தொகையாக வழங்கப்படும்.

பயிற்சிகளில் தேர்ந்தவர்களுக்கு அவர்களின் திறமைக்கு ஏற்ற பொருத்தமான நிரந்தரத் தொழில் வாய்ப்பு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும்.

சி. சிவபாலன்

(B-2410) பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம்.


---


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

தமிழ், ஆங்கிலம், தட்டச்சு, சுருக்கெழுத்து பாடநெறி

மேற்படி பாடநெறி இலவசமாக முழுநேரம்/ பகுதி நேரம் நடாத்தப்படும்.

1. விரும்பும் மாணவர்கள் விண்ணப்பிக்கவும்
2. தகைமையுள்ள ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவும் தகைமைக்கேற்ப வேதனம் வழங்கப்படும்.
3. தமிழ், ஆங்கில தட்டச்சுக்கள் உடனே தேவை. இவை விற்பனைக்கு இருப்பின் விலை அதன் விபரங்கள் ஆகியன அனுப்பி வைக்கவும்.
4. தட்டச்சு திருத்துநர் தனித்தனி தட்டச்சு திருத்துவதற்கு வேதனம் வழங்கப்படும்.

07-05-1991க்கு முன்வரும் விண்ணப்பங்களே பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக்கிளை,
73, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

-கௌரவ செயலாளர்

(B-2416)

# காமினி திஸநாயக்கா மீதான அரசியல் பழிவாங்கல்?

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகரும் முன்னாள் அமைச்சருமான காமினி திஸநாயக்கா மீது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டுவருவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா போன்று அல்லாது தற்போதைய ஜனாதிபதி ஆர். ரணசிங்க பிரேமதாஸாவின் அரசியல் அணுகுமுறைகள் பெருமளவில் வேறுபட்டதாகும் முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி கட்சிக்குள் உள்ள முரண்பாடுகளை திறமையாகக் கையாண்டு கொண்ட அதேவேளை கட்சியைப் பலமான நிலையில் வைத்துக் கொண்டு எதிரணியினருடன் மோதினார். ஆனால் தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதி கட்சிக்குள் உள்ள தனக்கெதிரானசக்திகளை பழிவாங்கும் நடவடிக்கையில் முனைப்பாகவுள்ளார்.

## வரலாற்றுப் பாடம்

மேலும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தஅமைச்சர்களில்பெரும்பாலானவர்கள் குடும்ப, பண பலமுள்ளவர்களாவர். இவை அவர்களுக்கு பலமான அரசியற் பின்னணியைக் கொடுத்தன. ஆனால், ஜனாதிபதி பிரேமதாஸா அரசியல் குடும்ப் பண பலமுள்ள அரசியல்வாதிகள் பெரும்பாலும் தனது அமைச்சரவையில் இடம்பெறுவதை விரும்பவில்லை அதாவது அமைச்சரவையில் தமக்கு நிகராகவோ அன்றி தமக்கு நெருக்கடியைத் தோற்றுவிக்கக் கூடிய நிலையில் ஒருவர் உருவாகுவதையோ விரும்பவில்லை. இது சிறிலங்கா ஜனாதிபதிக்கு வரலாறு கற்றுக் கொடுத்த பாடமாகும்.

முன்னாள் அதிபர் ஜே ஆர் ஜெயவர்த்தனா காலத்தில் பிரதமமந்திரியாக இருந்த இன்றைய ஜனாதிபதி பிரேமதாஸா அவர்கள் இறுதிக் காலத்தில்ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவிற்கு பெரும் நெருக்கடியான மனிதனாகவே இருந்தார்.ஜனாதிபதிஜே.ஆர் ஜெயவர்த்தனாவால் அவரை தனது வழிக்குக் கொண்டுவர முடியாமலே போய்விட்டது. சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் திகதி இடாத பதவி விலகல் கடிதங்களைத் தமது சட்டைப்பையில் வைத்திருந்த ஜே. ஆர் ஜெயவர்த்தனாவால் கூட பிரேமதாஸாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியவில்லை அந்தளவில் அவர் பலம் பெற்றிருந்தார். இதற்கு அவரது அரசியற் செயற்பாடுகளே காரணமாக இருந்தன.

ஜனாதிபதி பிரேமதாஸா தமது கடந்தகால வரலாற்றை தெளிவாக உணர்ந்துள்ளார். இதன் காரணத்தினால் தமக்கு எதிராக ஒரு பலமான சக்தி கட்சிக்குள் வளர்வதை அவர் ஒருபோதும் விரும்பவில்லை. இதனை அவரது நடவடிக்கைகள் காட்டுவதாகவுள்ளன.

## ஜனாதிபதித் தேர்தலில் முரண்பாடு

1989ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐ. தே. கட்சியின் வேட்பாளர் தெரிவுக்காக இன்றைய ஜனாதிபதி பிரேமதாஸாவும், முன்னாள் அமைச்சர் காமினிதிஸநாயக்காவும், தற்போதைய கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் போட்டியிட்டனர். இதில் முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவு தற்போதைய ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு இருக்கவில்லை. அவருடைய ஆதரவு இளைஞரான காமினி திஸநாயக்காவிற்கே இருந்தது. லலித் அத்துலத் முதலியும் போட்டியிட்டாராயினும் அவரது நிலை மூன்றாவது இடத்திலேயே இருந்தது.

இத் தெரிவுத் தேர்தலில் தோல்வி அடைந்தாலும் காமினி திஸநாயக்காவும், லலித்அத்துலத்முதலியும் புதிய அரசாங்கத்தில் முக்கிய மந்திரிப் பதவிகள் இவர்களுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பிரேமதாஸா அவ்வாறாக நடந்து கொள்ளவில்லை. பிரபல்யமற்ற பலர் மந்திரி சபையில் இடம்பெற்றனர். முக்கிய மந்திரிப் பதவிகள் அவர்களுக்கே வழங்கப்பட்டன. கட்சிகுள் இருக்கும் தனக்கு முரண்பாடானவர்களை உடன் தூக்கி எறியாமல் முக்கியத்துவமற்ற மந்திரிப் பதவிகள்வழங்கப்பட்டன. இதன் பிரகாரம் காமினி திஸநாயக்கா தோட்டக் கைத்தொழில் அமைச்சராகவும், லலித் அத்துலத்முதலி விவசாய அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர்

அதேவேளை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே தனக்கு விரோதமாகப் பலர் செயற்பட்டதாகப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார் அக் குற்றச்சாட்டு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும், காமினி திஸநாயக்காவையுமே மறைமுகமாகக் குறிப்பிட்டதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

அதேவேளை அமைச்சர் லலித் அத்துலத்முதலி பிரேமதாஸாவிற்கு எதிராக வேட்பாளர் தெரிவில் போட்டியிட்டாலும் கொழும்பை மையமாகக் கொண்ட அவர் காமினி திஸநாயக்காவைப் போன்று அச்சுறுத்தும் தன்மையாக இல்லாததோடு அவர் அரசியல் நடவடிக்கையில் தீவிர ஈடுபாடு காட்டுவதற்கு அவரது உடல் நிலை சாதகமாக இருக்கவில்லை. பாராளுமன்றக் குண்டு வெடிப்பில் காயம் ஏற்பட்டபின் லலித் அத்துலத்முதலி முன்னர் போல் தீவிரமாகச் செயற்பட முடியாமல் போய்விட்டது.

## காமினி புறக்கணிப்பு

இந் நிலையில் அமைச்சர் லலித்தினால் தொல்லைகள் ஏற்பட வாய்ப்பில்லை என கணிப்பீடு செய்த பிரேமதாஸா அவர்கள் காமினி பக்கமே தனது முழுக்கவனத்தையும்செலுத்தினார். இதன் பிரகாரம்ஒருவருடத்தின் பின்னர் ஏற்பட்ட மந்திரிசபை மாற்றத்தின்போது காமினி திஸநாயக்கா அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்டார்

ஐக்கிய தேசியக் கட்சியினுள் காமினி திஸநாயக்காவின் வளர்ச்சி ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு சலிப்பூட்டுவதாக இருப்பதற்கு அவரைப் பொறுத்தளவில் நியாயமும் உண்டு. காமினி திஸநாயக்கா ஓர் உயர் வகுப்பைச் சேர்ந்த கண்டியச் சிங்களவர். அரசியல் பின்னணி உள்ளவர். இன்றைய ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு உள்ளது போன்று மக்கள பலமும் உள்ளவர். கடந்த தேர்தலின் போது விகிதாசார ரீதியாக உயர்ந்தளவு வாக்குகளைப் பெற்றவர்.

இன்றைய ஜனாதிபதி மக்கள் பலம் பெறுவதற்கு வீடமைப்புத்திட்டம் காரணமாக இருந்தது போன்று காமினி திஸ நாயக்கா மக்கள் பலம் பெறுவதற்கு மகாவலி அபிவிருத்தித்திட்டமும், ஐக்கிய தேசியக்கட்சியின் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கத் தலைவராக இருந்தமையும் காரணிகளாக இருந்தன. அத்தோடு போதிய பணபலமும் உண்டு.

இந்நிலையில் தமக்கு நிகராக சில விடயங்களில் சிலவற்றில் மேலாகவும் ''சமூக அந்தஸ்து'' உடைய ஒருவர் கட்சிக்குள் பலம் பெறுதலை பிரேமதாஸா அவர்களால் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை.

## பழிவாங்கல் முயற்சிகள்

இவற்றின் வெளிப்பாடாக காமினி திஸ நாயக்கா மீது ஏதோ ஒரு வகையில் அரசியல் பழிவாங்கல்கள் மேற்கொள்ள தீவிர முயற்சிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாசத் தெரிகின்றது முதலில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் மகாவலி, காணி, காணி அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது காமினி திஸநாயக்கா பெரும் தொகைப் பணத்தைக் கையாடல் செய்தார் என்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறாமலே பல கோடி ரூபா பெறுமதியான விகாரை ஒன்றை கொத்மலையில் ஆரம்பித்தார் எனவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பாக பின்னர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

# இவ்வார நோக்கு

காமினி திஸநாயக்காவிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தீவிரமாக இருந்த அரசாங்கம் அவரது சொத்துக்களிலும் குறிவைத்திருந்ததாம். இது தொடர்பாக ஒரு சுவாரஸ்யமான சம்பவம் இடம்பெற்றதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது. அமைச்சர்கள், அரசியல்வாதிகள் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட (தீர்வையற்ற விலையில்) வாகனங்களை விற்ககூடாது எனவும், விற்றிருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தாராம். இதனால் அவரது அமைச்சரவையில் ஒன்றிற்கு மேற்பட்ட பல முக்கிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான முதியவர் வெகுவாகக் குழப்பமடைந்து காணப்பட்டாராம்; இது ஒருவாறு கட்டளை இட்டவருக்குத் தெரியவந்த போது அவர் முதியவரை அழைத்து இது உமக்கல்ல இளைஞருக்கு எனத் தெரிவித்து இவரது குழப்பத்தை நீக்கினாராம்.

இவ்வாறான அரசியல் நெருக்கடிகள் தொடர்வதைக் கண்ட காமினி திஸநாயக்கா மேற்படிப்பு எனக் கூறி லண்டன் சென்றார் ஆனால் முன்னாள் நிதி அமைச்சர் றொனி டிமெல் சிறிலங்கா அரசாங்கம் கொடுத்த தொல்லையினால் வெளிநாட்டில் தங்கியதுபோன்று காமினி திஸநாயக்கா அங்கேயே தங்கி விடவில்லை. சிறிலங்கா அரசியலில் காமினி மௌனமானார். ஆனால் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள அவர் விருமபவில்லை.

இந்நிலையில் சிறிலங்கா திரும்பிய காமினி திஸநாயக்கா மீது 1988 இல் நடந்த பேராசிரியர் புல்ஜின்ஸ் கடத்தல் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது இவ்விசாரணை தொடர்பாக கருத்து வெளியிட்ட காமினி திஸநாயக்கா இது ஒரு அரசியல் மிரட்டல் எனத் தெரிவித்துள்ளார். ஆனால், காமினி திஸநாயக்கா சிறிலங்கா திரும்பியதும் கைது செய்யப்படலாம் அல்லது விசாரணை செய்யப்படலாம் என பத்திரிகைகள் செய்தி வெளியிட்ட பின்னரும அவர் திரும்பியிருப்பது சிறிலங்கா ஜனாதிபதியின மிரட்டலுக்கு அவர் இலகுவில் பணிந்து விடப் போவதில்லை என்பதையே காட்டுகின்றது.

சிறிலங்கா ஜனாதிபதி ஒரு பொம்மை அமைச்சரவையே நிறுவப் பார்க்கின்றார் தற்போதைய அமைச்சர்கள் எவரும் பலமான அரசியல் பின்னணி கொண்டவர்கள் இல்லை. இதன் காரணமாக தேர்தலைக்காட்டியே பாராளுமன்ற உறுப்பினர்களை மிரட்டலாம் என பிரேமதாசா எண்ணுகின்றார்போல் தெரிகின்றது.

இதேவேளை மூன்றாம் உலக நாடுகளில் அவை ஜனநாயக நாடுகளாக இருந்தாலும் அரசியல்பழிவாங்கல் புதியதொரு விடயமல்ல ஆனால் அரசியல் பழிவாங்கல்கள் நடவடிக்கைகள் மூலம் தனிநபர் ஆட்சியைப் பலப்படுத்திய நாடுகளின் எதிர்காலம் மிகவும் நெருக்கடி மிக்கவையாகவே அமைந்தது வரலாறாகும். அத்தோடு அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வை நாடி நிற்கும் சிறிலங்கா போன்ற நாடுகளில் இப்பழிவாங்கல் நடவடிக்கைகள் ஆச்சரியப்படுத்தக் கூடியவையல்ல ஏனெனில் இதை ஒத்த நிகழ்வுள்ளநாடுகள்சிலவற்றில் அரசியல் கொலைகள் மூலமும் பழிவாங்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன. சிறிலங்காவும் அந்த நிலைக்கு முன்னேறுமா? முன்னேறி விட்டதா? முன்னேறி விட்டதாகவும் ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் உண்டு.

**- ஜெயா -**

---

## ஏவுகணை
(4ஆம் பக்கத்தொடர்ச்சி)

சவூதி அரேபியா சீனாவிடமிருந்து CSS 2, ஈஸ்ட்விண்ட் (East Wind) ஏவுகணைகளை 1988 இல் கொள்வனவு செய்துள்ளது. இவை 2,200 கி.மீ வரை தாவி இலக்குகளை அழிக்க வல்லன. அப்படியாயின் இந்த ரக ஏவுகணைகள் இஸ்ரேலில் உள்ள இலக்குகளை சுலபமாகத் தாக்கக் கூடியனவாகும்.

எகிப்து, ஜேர்மன் தொழில் நுட்பத்தைக் கையாண்டு ஆர்ஜன்ரீனாவின் கொண்டூர் II ஏவுகணைகளைசில முன்னேற்றங்களுடன் தயாரித்துள்ளது. பதார் 3000 என்றழைக்கப்படும் இந்த ஏவுகணைகள் 2, 000 கி. மீ. வரை ஏவக்கூடியவை.

பிரேசில் ஜேர்மன் உதவியுடன் உற்பத்தி செய்துள்ள 1,000 கி மீ வரை ஏவக்கூடிய கோண்டா ஏவுகணையில் சென்ற ஆண்டில் லிபியா அக்கறை காட்டியுள்ளது.

எது எப்படியிருந்தாலும், ஏவுகணைத் தொழில் நுட்பவியலிலும், உற்பத்தியிலும் 3 ஆம் உலக நாடுகளில் சீனா முதலிடம் வகிக்கிறது. இரசாயன ஆயுதம் பொருத்தப்பட்ட ஏவுகணைகள் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் உட்பட 30 வகையான ஏவுகணைகள் சீனாவிடம் உள்ளன. இந்தியா சீனாவுக்கு அடுத்த படியிலே தான் உள்ளது. பாகிஸ்தானின் நிலை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

சீனா அமெரிக்க தொழில் நுட்பவியலைப் பயன்படுத்தி ஏவுகணை உற்பத்தியில் பிரமிக்கத் தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. பணத்தையும் நண்பர்களையும் தேட சீனா 3 ஆம் உலக நாடுகளுக்கு ஏவுகணைகளை விற்கின்றது. சீனா - சவூதி அரேபிய ஏவுகணை வியாபாரம் சீனாவிற்கு ஒரு இராஜதந்திர வெற்றியாகும். இதனால் சீனா சவூதி அரேபியாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது.

'M குடும்பம்' ஏவுகணைகளையும் சீனா தயாரித்து வருகிறது. பிரச்சினைக்குரிய M-9 ஏவுகணைகளும் இக்குடும்பத்தைச் சேர்ந்ததாகும். இந்த ரக ஏவுகணைகளை வளைகுடா நாடுகளுக்கு விற்க வேண்டாம் என்று ஐரோப்பிய நாடுகள் சீனாவை வற்புறுத்தியுள்ளன.

சமீபகாலங்களில்தைவானும் தென்கொரியாவும் ஏவுகணை, உற்பத்தியில் குதித்துள்ளன.

3 ஆம் உலக நாடுகளின் ஏவுகணை உற்பத்தி வல்லரசுகளுக்கு முற்றிலும் மனநிறைவு அளிப்பனவாக இல்லை காரணம் ஏவுகணை உற்பத்தி முன்னேற்றத்தின் ஓர் உடன் நிகழ்ச்சியாக இரசாயன ஆயுதங்களும் ஏவுகணைகளில் பொருத்தப்படலாம் என்று வல்லரசுகள் அஞ்சுகின்றன. அத்துடன் 3 ஆம் உலக நாடுகளும் ஒன்றுக்கொன்று முந்திக்கொண்டு ஏவுகணைகளை உற்பத்தி செய்கின்றன.

## ஆயுத அழிப்பை மேற் பார்வையிட ஐ. நா. குழு நியமனம்

(நியூயோர்க்)

ஈராக்கின் இரசாயன ஆயுதங்களும் ஏனைய ரக ஆயுதங்களும் அழிக்கப்படுவதை மேற்பார்வையிடுவதற்கு குழுவொன்றைநியமித்திருப்பதாக ஐ நா. சபையின் தலைமைச் செயலாளரான பெரஸ் டி கொயிலர் தெரிவித்துள்ளார்.

சுவீடனின் தூதுவர் ரோல்ட் எக்கியூஸ்ட் இந்த நிர்வாகக் குழுவிற்கு தலைவராக இருப்பார் என்றும் அமெரிக்காவின் பிரதிநிதி துணைநிர்வாகத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் கூறினார்.

இந்தக் குழுவின் 25 உறுப்பினர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்றும், சர்வதேச அணு சக்தி அமைப்புடன் சேர்ந்து இந்தக் குழு நடவடிக்கையை மேற் கொள்ளும் என்றும் பெரஸ் டி கொயிலர் தெரிவித்துள்ளார்.

வளைகுடாப் போர் நிறுத்தம் குறித்த ஐ. நா. சபையின் தீர்மானத்திற்கு அமைய எல்லா இரசாயன ஆயுதங்களையும் மற்றைய ஆயுதங்களையும் ஈராக் அழித்திட வேண்டும்என்பது தெரிந்ததே.

### கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டுவர

## சதாம் - குர்திஷ் போராளிகள்

# கொள்கை அளவில் இணக்கம்

(பாக்தாத்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு எதிரான கிளர்ச்சியை முடித்து வைப்பது தொடர்பாய் ஈராக்கிற்கும் குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கும்இடையில் கொள்கையளவில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பாக்தாத்தில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனும், குர்திஷ் தலைவர் ஜலால் தலாப்வானிக்கும் இடையில் ஒருமணி நேரமாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் இந்த கொள்கையளவு உடன்பாடு ஏற்பட்டதாக குர்திஷ் தலைவர் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

இறுதியான உடன்படிக்கை ஒன்றுக்கான விபரங்களை எழுதுவதற்கு இன்னுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அவசியம் என்றும் ஈராக்கில் இயல்பு நிலையை தோற்றுவிப்பது, ஜனநாயகத்தை நிலைநாட்டுவது, குர்திஷ் இனத்தவரின் தேசிய உரிமைகள், தேசிய ஒற்றுமைகள் போன்ற பிரச்சினைகள் பேச்சுக்களில் ஆராயப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஈராக்கிய அரசாங்கத்துடன் இறுதியான உடன்பாடு ஒன்று எட்டப்பட்டவுடனேயே அமெரிக்கத் துருப்புக்கள உட்பட அயல்நாட்டுப் படையினர் அனைவரும ஈராக்கை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

### வட. இல. சங்கீத சபையின்

## செய்முறைப் பரீட்சைகள் நாளை நடைபெறும்

(நல்லூர்)

வட இலங்கை சங்கீத சபையின் தரம் ஒன்று மதல் தரம் நான்கு வரையிலான 1991 ஆம் ஆண்டிற்கான செய்முறைப் பரீட்சை நாளை நடைபெறும். சங்கீதத்திற்கான அனுமதிப் பத்திரம், நேர அட்டவணைகளை அந்தந்தப் பரீட்சை நிலையங்களில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளலாம்.

பரதம், பண்ணிசை, கதகளி, மிருதங்கம் ஆகியவைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்காதவர்கள் பரீட்சை நிலையத்தில் தலைமைப் பரீட்சகருடன் தொடர்பு கொள்ளலாம் என்றுவ, இ சங்கீதசபையின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## துருக்கிய எல்லையில் அமெரிக்க கொடிக்கு தடை

(வாஷிங்டன்)

ஈராக்கிய நகரமான சக்கோவில் ஈராக் படைகளை நிறுத்தப்படுவது மோசமான நிலையைத் தோற்றுவித்திருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் எச்சரித்துள்ளார், அவர் மேலும் ஈராக் அரசுடன் குர்திஷ் போராளிகள் நிறைவேற்றிய ஒப்பந்தம் குறித்தும் வேறுபட்ட கருத்தையு கூறினார்.

இதேவேளை துருக்கி எல்லையில்நேசநாட்டுப் படைகள் ஏற்றிய கொடியை இறக்க வேண்டும் என்றும், தமது நாட்டு எல்லையில் ஹெலிகொப்டர்கள் பறக்சக் கூடாது எனவும் துருககி அரசு கூறியுளளது.

### ஏக பிரதிநிதிகள்

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய என். எம். ஜா விடுதலைப்புலிகள் தேர்தல்களில் போட்டியிட தயங்கக் கூடாது என்றும், இலங்கைத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறுவதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்கு தனது பங்களிப்பை இந்தியாவே தீர்மானிக்கும் என்று குறிப்பிட்டார்.

### ஊரடங்கு

நேற்று கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் பேசிய பாதுகாப்புச் செயலாளர் இராணுவத்தினர் தற்போது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளே எனவும் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதுசம்பந்தமாகவிடுதலைப் புலிகளிடம் இருந்து எதுவித தகவலும் கிடைக்கவில்லையெனவும் குறிப்பிட்டார். கொழும்பு நகரத்தில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ''தண்டர்போட்'' என்ற குறியீட்டுப் பெயர்கொண்ட நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் படி படையினர் எந்த முன்னறிவிப்புமின்றி இடங்களையும் வாகனங்களையும் சோதனையிடலாம் குறிப்பாக வாகனங்கள் திடீரென எவ்விடத்திலும் மறித்துச் சோதனையிடப்படலாம். எனவே இவ்விடயத்தில் பொதுமக்களை ஆயுதப் படையினருடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

### நாரந்தனையில்

என்பவரும் கொல்லப்பட்டனர். அருள்சீலன் (வயது 15), சவரிலுப்பியஸ் வயது 65), ஒரு சிறு குழந்தை உட்பட மேலும் பலர் காயமடைந்தனர். இப்பகுதியில் இருந்த பொதுமக்கள் சிலரின் வீடுகளும் சேதமடைந்தன.

(க, லோ, 85)

### சிறிலங்கா

வெளியுறவுத்துறை அமைச்சர் ஹரல்ட்ஹேரத் இந்தியாவுடன் சிறிலங்கா நட்புறவை வளர்க்க முயற்சியை மேற்கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு துன்புறுத்தப்பட்டமை துரதிர்ஷ்டவசமானது என்று கூறினார்.

### சர்வதேச

எமது போராட்டத்தில் எந்தளவு உறுதிபெற்றுள்ளோம் என்பதை சர்வதேச மட்டத்துக்கு எடுத்துக்காட்டுவதற்காக எமது எழுச்சிப் பேரணியை நடாத்துவோம் என நேற்று யாழ். செயலகத்தின் தொழிலாளர்களும், நிழல் நிர்வாக பிரதிநிதிகளும் இணைந்து தீர்மானித்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் இந்த ஊர்வலம் தமிழரின் வரலாற்றை எடுத்துக் காட்டுவதாக அமைய வேண்டும் என்றும் அதற்கு ஏற்றவகையில் மேதின பதாகைகள் அமையவேண்டும் எனவும் கேட்டுக கொள்ளப்பட்டது. (லோ)

### உதவியாக

மண்ணெண்ணை வழங்கப்படாமையாலும் இந்தத்திட்டம் தோல்வியுற்று அறுவடை குன்றி உள்ளதாகவும் தெரிகிறது.

இந்த நடைமுறை விவசாயிகளை பாதிப்பதோடு மேலும் உதவிகள் பெறுவதை தடைப்படுத்தியும் உள்ளது இதுபற்றி பல விவசாயிகள் கடன மீளளிப்புகளை செய்ய மறுத்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

### ஆறு காவலரண்கள்

கையில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரீ-56 - 1 ரக துப்பாக்கி - 1
- ★ ஐ. எம். ரவைகள் - 162
- ★ மகஸின் - 6
- ★ ஜே. ஆர். கைக்குண்டு - 1

### தற்காலிக

படமுடியும். அந்த அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியும் எனப் பதிலளித்தார்.

பொது மக்கள்தான் அதிகம் பாதிக்கப்படுவதால் விடுதலைப்புலிகள் தமது நிலையிலிருந்து விட்டுக் கொடுத்தால் என்ன என்ற பிறிதொருகேள்விக்குப் பதிலளிக்கையில்:

நாம் அமைதியை நாடுகின்றோம் அமைதியைநாடுகின்ற அதேவேளை பாதுகாப்பையும் நாடுகின்றோம். இன்றையதற்காலிக அமைதி நாளை எமது மக்களுக்குப் பங்கமாகவோ எமது உயிர்களுக்குப் பங்கமாகவோ இருப்பதை நாம் அனுமதிக்கப் போவதில்லை. நாம் எதை விட்டுக் கொடுக்கவேண்டும்? எமது உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது எமது உரிமைக்காகத்தான் போராடிக் கொண்டிருக்கின்றோம். எமது மக்களுடைய இழப்பும் வேதனையைத் தருகிறது. எமது மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகவே போராடிக்கொண்டு வருகின்றோம். நாங்கள் தேடுவது ஒரு நிரந்தர 'அமைதியைத்தான் என்றார்.

### அவர்களின்

தாஸா அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கலவானையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய ஆர். பிரேமதாஸா யுத்தம் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது என்பது முடியாத காரியம். இந்தக்கொள்கையைக் கடைப்பிடிக்க நான் விரும்பவில்லை. யுத்தம் தொடருமானால் இந்தப் பொருளாதாரம் மேலும் சீர்குலையும். இதனால் வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும். இந்தச் சுமையைப் பாமர மக்களால் தாங்கமுடியாது. எனவே தீவிரவாதிகளைப்பேச்சுவார்த்தைக்கு அழைத்து அவர்களின் அத்தியாவசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவுசெய்துள்ளேன் எனக் குறிப்பிட்டார்.

## சுற்றிவளைக்க முயன்ற இராணுவம்-புலிகள்மோதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தின் உப்பாறு, ஆலங்கேணி, குரங்குபாஞ்சான் முகாம்களிலிருந்து செவ்வாயன்று காலை ஆறு மணியளவில் வெளியேறிவந்த இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும்இடையேமோதல் ஏற்பட்டது.

இதுபற்றித்தெரியவருவதாவது; உப்பாறு ஆலங்கேணி, குரங்குபாஞ்சான் முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் அல்லைப்பாலம், குரங்கு பாஞ்சான் ஆலங்கேணி பகுதிகளில் உள்ள காட்டுப புறங்களை முற்றுகையிட முனைந்த போது மோதல் ஏற்பட்டது. முகாமிலிருந்து வருகையில் வழியில் தென்பட்ட பொதுமக்களையெல்லாம் பணயக் கைதிகளாகக்கொண்டு இராணுவம் முன்னேறியது. இம் மோதலில் இராணுவ தரப்புக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. ஆயினும் மிதிவெடி வெடித்தமையால் இரு இராணுவத்தினர் கால்களை இழந்திருப்பதாக அறியப்படுகிறது உப்பாறுப் பகுதியில் தங்கியிருந்த இராணுவம் மறுநாளும் முன்னேற முயற்சித்தபோது மிதிவெடியில்சிக்கி இருவர் கால்களை இழந்துள்ளனர். இந்நிலையில் இராணுவம் முகாம்களுக்குத் திரும்பிச் சென்றது. கைதிகளாக்கப்பட்ட பொதுமக்களுக்கு என்ன நேர்ந்தது என்பதோ எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதோ தெரியவரவில்லை.

### மாணவர்கள்

லைப் போராட்ட வரலாற்றை அடக்கிய புகைப்படக் கண்காட்சி பயன்படும் என்பதற்காக இந்தக் கண்காட்சியை நாம் ஏற்பாடுசெய்துள்ளோம். இன்று இங்கு திரளாக திரண்டிருப்பது மாணவர்கள்தான். இங்கு திரண்டிருப்பதைப் போல எமது போராட்டத்திலும் மாணவர்கள்தான் அதிக அளவு பங்களிப்புச் செலுத்தி வருகின்றனர்.

வடபகுதியின் பெரும் பகுதி இன்று எமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதால் இங்குள்ள மாணவர்கள் ஓரளவு கல்வியை பயிலுவதற்கு வசதி இருக்கின்றது. தமிழீழத்தின் தென் பகுதியில் உள்ள மாணவர்களுக்கு அந்த நிலை இல்லை. அங்கு போராடாமலேயே பெருமளவு இளைஞர்கள், மாணவர்கள் சிங்களப படையினால் கொல்லப்பட்டும், கைது செய்யப்பட்டும் வருகின்றனர் இந்த நிலையில் ஏராளமான இளைஞர்களை அவர்களது பெற்றோர்களே இயக்கத்தில் கொண்டுவந்து சேர்க்கின்றனர்.

அதுபோன்று வடபகுதி இளைஞர்களும் பெருமளவில் இயக்கத்தில் இணைந்து எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை விரைவு படுத்த வேண்டும். விடுதலைப்போராட்டத்தில் அனைத்து மக்களின் பங்களிப்பு, எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை விரைவு படுத்தும் என்று குறிப்பிட்டார்.

இந்தப் புகைப்படக் கண்காட்சி இன்றைய தினமும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## தந்தை செல்வா நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் நினைவஞ்சலிக்கூட்டம் இன்றுமாலை 6மணியளவில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது நல்லூர் வட்ட அவைத் தலைவர் பண்டிதர் சு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் இக் கூட்டம் இடம்பெறும்.

### வவுனியாவுடன்

பிரிப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ். பிராந்திய அலுவலகத்தின் கிளையாகவே இதுவரை காலமும் கிளிநொச்சி வங்கிக் கிளையும் இயங்கிவந்தது. தற்போது இக்கிளையை வவுனியா பிராந்திய அலுவலகத்துடன் இணைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. கடந்த மாதம் வங்கி முகாமையாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் இதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. (க)

## மரண அறிவித்தல்

## திருமதி லக்சுமி கணபதிப்பிள்ளை

திருமதி லக்சுமி கணபதிப்பிள்ளை அவர்கள் 25-04-91 அன்று காலமாகிவிட்டார். இவர் பாலாவியைப் பிறப்பிடமாகவும், யா. ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற வே கணபதிப்பிள்ளையின் அன்புமனைவியும்,செல்லம்மா, மகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா, நாகராசா, தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவஞானம் (அதிபர், உடுவில் A. M. T. S.), நாகராசா (கட்டட ஒப்பந்தகாரர்), துரைமணி, யோகநாதன் (காங்கேசன் சீமெந்துஆலை பரிசோதகர்), பரமநாதன் (கட்டடக் கலைஞர்), கமலநாதன் (கட்டடக்கலைஞர்), லீலாவதி (டென்மார்க்),மனோகரன் (வர்ணம் தீட்டுபவர், கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராஜா முன்னைநாள் யாழ். ப. நோ. கூ. சங்க இயக்குநர்), நவம் (டென்மார்க்), பத்மாவதி, ஞானமணி, பிரேமாவதி, பரமேஸ்வரி, இராசா, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆத்திசூடி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக (27 - 04 - 91) நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொக்குவில் கணக்கர் மரத்தடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.

110, ஆத்திசூடி வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல் கொடுப்பவர்:
இராசசேகரம்
(R/1354)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.